ஓம்
பரப்பிரஹ்மணே நம:

# ஆனந்தபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு"—திருவள்ளுவர்

(All Rights Reserved.)

தொகுதி 2 | நளஹு தைமீ 1௳ 1917-ம்ஹு ஜனவரிமீ 13௳ | பகுதி 7

## கடவுள் வணக்கம்

இப்பிறவி யென்னுமோ ரிருட்கடலின் மூழ்கினா
னென்னுமொரு மகர வாய்ப்பட்
டிருவினை யெனுந்திரையி னெற்றுண்டு புற்புத
மெனக்கொங்கை வரிசை காட்டுந்
துப்பிதழ் மடந்தையர் மயற்சண்ட மாருதச்
சுழல்வந்து வந்த டிப்பச்
சோராத வாசையாங் கானுறு வானதி
சுரந்ததென மேலு மார்ப்பக்
கைப்பரிசு காரர்போ லறிவான வங்கமும்
கைவிட்டு மதி மயங்கிக்
கள்ளவங் கக்காலர் வருவரென் றஞ்சியே
கண்ணருவி காட்டு மெளியேன்
செப்பரிய முத்தியாங் கரைசேர வுங்கருணை
செய்வையோ சத்தாகி யென்
சித்தமிசை குடிகொண்ட வறிவான தெய்வமே
தேஜோ மயானந் தமே.

---

வடிவனைத்துந் தந்தவடி வில்லாச் சுத்த
வான்பொருளே யெளியனேன் மனமா மாயைக்
குடிகெடுக்கத் துசங்கட்டிக் கொண்ட மோன
குருவேயென் றெய்வமே கோதி லாத
படியெனக்கா னந்தவெள்ளம் வந்து தேக்கும்
படியெனக்குன் றிருக்கருணை பற்று மாறே
யடியெடுத்தென் முடியிலின்னம் வைக்க வேண்டு
மடிமுடியொன் றில்லாத வகண்ட வாழ்வே.

# ஆனந்த போதினி

நள௵ தைமீ 1௳

## நாகரீகமும் சீர்திருத்தமும்.

இதுகாறும் சரித்திரங்களின் வாயிலாய்த் தெரிந்திருக்கிறவரையில் நாகரீகம் என்றது ஆதியில் கிழக்குதேசங்களில் உண்டாயிருந்து பின்பே மேற்குநோக்கிச் சென்றதெனத் தெரிகிறது. பரதகண்டமாகிய இந்தியாவென்னும் இப்புண்ணிய பூமியில் அனாதிகாலந் தொட்டே நாகரீகமும் செல்வமும் நிறைந்திருந்ததாக நன்கு நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இதற்கு எண்ணிறந்த அத்தாட்சிகள் உண்டு. இந்தியாவில் பலகாரணங்களால் பிற்காலத்தில் அவை நாளுக்கு நாள் குறைவடைந்துபோக, பின்னால் நாகரீகமடைந்த மேல்நாட்டார் அனேகவிஷயத்தில், பெரும்பாலும் ஜடசாத்திர ஆராய்ச்சி முதலிய இகலோக க்ஷேமாபிவிர்த்திக்குவேண்டிய விஷயங்களில், மேலோங்கிவிட்டார்கள். இந்தியரோ அவைகளில் குறைவுற்றாலும் ஆன்மார்த்தமான விஷயத்தைமட்டும் பத்திரமாகவே பாதுகாத்துவந்தனர், பாதுகாத்தும் வருகின்றனர், இனியும் எப்போதுமே பாதுகாத்து வருவார்கள் என்பதில் ஐயமின்றாம்.

இந்தியர் அடைந்திருந்த நாகரீகமும் ஆச்சரியமான அரிய வல்லமைகளும் பிற்காலத்தில் கேட்போர் அசம்பாவிதமென்று நினைக்கக் கூடியனவும், பொய்யான கட்டுக்கதைகளென்று இகழத்தக்கனவாகவும் ஆய்விட்டன. அத்தகையவை இப்போது மேல்நாட்டார் புதிதாய்க் கண்டுணரும் ஜடசாத்திர ஆராய்ச்சியால் ஏற்படும் அனுபவங்களால் ஒவ்வொன்றாய் உண்மையாகவே நடந்தவையென்று உணரப்படுகின்றன.

அத்தகைய நாகரீகமும் செல்வமும் யாவும் இராஜாங்கமாறுதல்களால் நேரிட்ட பலகாரணங்களால் நாளுக்கு நாள் குன்றிவிட்டன. அக்காலங்களில் நமது நாட்டார் பட்டபாடு அளவிட்டுரைத்தற் பாலதன்று. ஆனால் நம்மவர் அக்கஷ்டகாலங்களால் விதியில்லையென்று செல்வத்தையும் சீரையும் சிறப்பையும் உயிரையுமே யிழக்க நேர்ந்தா

லும் தாங்கள் உயிரினும் சிறந்ததாய்க் கருதிய மதத்தையும் ஆசார ஒழுக்கங்களையும்மட்டும்காப்பாற்றிக்கொண்டனர். கருணைபொருந்திய பிரிடிஷ் துரைத்தனம் நமது நாட்டில் ஸ்தாபிக்கப்பட்டது முதல் நமது ஆபத்துகளனைத்தும் ஒழிந்துபோயின. கொடுங்கோன்மையொழிந்து செங்கோல் நிலை நிறுத்தப்பட்டது. அனுபவித்த தீமைகளுக்குப் பதிலாய் எண்ணிறந்த நன்மைகள் உண்டாயிருக்கின்றன. இப்போது நாம் இழந்துவிட்டிருக்கும் சீரையும் செல்வத்தையும் பெறுதற்காகவேண்டிய முயற்சிகளைக் கருணைபொருந்திய துரைத்தனத்தாரின் ஆதரணையின் கீழ் தாராளமாய்ச்செய்யும் நிலைமையிலிருக்கிறோம்.

நமது நிலைமை யிவ்வாறிருக்க, நமது நாடு நாகரீகமும் செல்வமும் மலிந்து விளங்கியிருந்த அக்காலத்தில் நாகரீகமென்ற நாமதேயத்தையே யறியாத நிலைமையிலிருந்த மேல்நாடுகள் இப்போது நாகரீகத்திலும் செல்வத்திலும் தலைமைவாய்ந்து விளங்குகின்றன. இதற்குக்காரணம் அந்தநாட்டினர் தங்களுக்கு அருமையாய்க்கிடைத்த நாகரீகமார்க்கங்களைக் கைப்பற்றி யனுஷ்டித்து இவ்வுலகில் மேன்மை பெறவேண்டியதற்கு அவசியமான மார்க்கங்களை இடைவிடாத ஊக்கத்தோடு கண்டுபிடித்து முன்னுக்கு வந்துவிட்டார்கள். ஆகையால் இப்போது நாம் அனேக விஷயங்களை யவர்களிடமிருந்து கற்றுக்கொள்ளவேண்டியதும் சிலவிஷயங்களில் அவர்களைப் பின்பற்றவேண்டியதும் நமது முன்னேற்றத்திற்கு அவசியமாயிருக்கின்றன. இம்மார்க்கங்களால் நம்மிடம் ஏற்பட்டுள்ள குறைகளை நீக்கிக்கொள்வதும் அடையவேண்டிய சாதனங்களை யடைவதுமே சீர்திருத்தம் என்று கூறப்படுவது.

மக்களாய்ப் பிறந்தோர் படும்பாடெல்லாங்கூடி இரண்டுவித பாக்கியத்தைப் பெறுதற்பொருட்டேயாகும். அவை இகலோக பாக்கியம், பரலோகபாக்கியம் என்பவைகளே. இப்போது இவ்விரண்டில் எந்தபாக்கியத்தைப் பெறவேண்டிய மார்க்கத்தில் நமது செயல்கள் சீர்திருத்தமடையவேண்டும் என்பதை முதலில் அறிந்துகொள்வோம். பரலோக பாக்கியமாகிய மோக்ஷவீட்டைப் பெற அனாதியாயுள்ளதும் ஒப்புயர்வற்றதுமான வேதமும் நமது முன்னோர் கட்டளையிட்டருளிய மார்க்க ஒழுக்கங்களும் சாசுவத நிலைமையுடையனவா யிருக்கின்றன. எவ்வாறெனின், அவை இயற்கையாயமைந்துள்ள உண்மைகள் என்னும் கற்பாறையாகிய அஸ்திவாரத்

தின்மேல் கட்டப்பட்ட இரும்புக்கட்டிடம் போன்றவை யாதலின் அவை யசைக்கப்படக்கூடியவையல்ல. அவற்றில் மாற்றவாவது குறைக்கவாவது கூட்டவாவது ஒருவழியுமில்லை, அவசியமுமில்லை. ஆகையால் இம்மண்ணுலகவாழ்க்கையில் மேம்பாடடையவேண்டிய மார்க்கங்களைத்தான் நாம் மேல்நாட்டாரிடமிருந்து தெரிந்துகொள்ள வேண்டும்.

இவ்வுலகபோகத்திற்குச் சுகதேகமும் செல்வமுமே அவசியமாய்வேண்டும். இரண்டிலும் மேல்நாட்டார் நம்மிலும் பன்மடங்கு மேம்பாடடைந்திருக்கிறார்கள். அவர்கள் ஊண், உடை, வாசஸ்தலம் முதலியவற்றில் சுத்தியையும், சுகாதாரவிதிகளையும் நன்றாய்க் கவனித்து வருதலால் தேகாரோக்கியத்தையும் நீண்ட ஆயுளையும் பெற்றிருக்கிறார்கள். ஜடசாத்திர ஆராய்ச்சியில் சிரத்தையும் ஊக்கமுங் கொண்டு நல்ல பயிற்சியடைந்து, கைத்தொழிலைப் பலபிரிவுகளிலும் அபிவிர்த்திசெய்து, பலபெயர்கள் பெரிய சங்கங்களாய்க்கூடிப் பெருந்தொகையை முதல்வைத்துக் கூட்டு வர்த்தகம்செய்து உலகிலுள்ள பலதேசங்களோடும் வியாபாரம் நடத்தித்திரண்ட செல்வத்தைப்பெற்று அதன் மூலமாய் எல்லாவல்லமைகளையும் பெற்றார்கள்.

ஊண், உடை, இல்லௌகிக ஆசார ஒழுக்கங்கள் இன்னனயாவும் அந்தந்தத் தேசத்திற்குத் தக்கினவாறாய் அமைந்திருக்கின்றன. ஒரு நாட்டின் அனுபவம் இன்னொருநாட்டிற்கு ஒருபோதும் ஒவ்வாது. ஒருநாட்டின் ஆசாரம் இன்னொருநாட்டிற்கு அனாசாரமாகவே தோன்றும். நாமோ நமக்கு அவசியமான விஷயங்களில் சீர்திருத்தத்தை யுண்டாக்காமல், நன்மையுண்டாகுமோ தீமையுண்டாகுமோ, கௌரவமோ அகௌரவமோ என்ற ஒன்றையும் கருதாமல் மேல்நாட்டாரைப்போல் எதிலும் நடப்பதே நாகரீகமும் கௌரவமுமான சீர்திருத்தமும் என்று எண்ணிக்கொண்டு குளிக்கப்போய் சேறு பூசிக்கொள்வதுபோல் நடந்து கொள்ளுகிறோம்.

சிங்கப்பூர் பிரதேசத்திலிருந்து வந்த ஒரு பத்திரிகையில் கீழ்க்கண்ட விஷயம் எழுதப்பட்டிருந்தது. அதாவது.—

“நான் சமீபகாலத்தில் சென்னைக்குச் சென்றிருந்தபோது, நாகரீகமான ஒரு உயர்தரப்புரவி பூட்டப்பட்ட புரோஹாம்வண்டியில் இரண்டு மங்கையரும் ஒரு ஆடவரும் சவாரிபோவதைக் கண்ணுற்றோம். மங்கையரிருவரும் நமது தேசாசாரப்படி உடை யணிந்து நுதலில் குங்குமப் பொட்டிட்டுக் கொண்டிருந்தார்கள். அவர்கள்

பெரும்பாலும் முதல் வகுப்பைச் சேர்ந்த அந்தண மாதரெனத் தோன்றியது. ஆனால் அவர்கள்கூட உட்கார்ந்திருந்த புருடரோ ஐரோப்பியரா, ஆங்கிலோ இந்தியரா, சட்டைக்காரர் என்ற வகுப்பினரா, ஐரோப்பிய உடை யணிந்த சுதேச கிருஸ்துவரா, அல்லது ஐரோப்பிய வேடந்தரித்த ஹிந்துவா நம்மாலறிந்துகொள்ள முடியவில்லை. ஏனெனில் அவருடைய லலாடம் சூனியமா யிருந்ததோடு காற்சட்டை, பூட்ஸ், காலர் முதலிய ஐரோப்பிய உடை பூரணமா யணிந்தும் அவர்களைப்போலவே ஒரு ஓரமகன்ற பெரிய தொப்பியையு மணிந்திருந்தார். அந்தோ! சீர் திருத்தம் சீர் திருத்தம் என்று எங்கும் பெரு முழக்கமாயிருக்கும் சென்னையிலேயே நாகரீகம் இத்தகைய சீர்கேட்டை யுண்டாக்குமென்று நாம் கனவிலும் நினைக்கவில்லை. ... ... ... ... ...”

அந்தோ நண்பர்களே! இதுவா சீர்திருத்தம்? பொருளிலார்க்கிவ்வுலகமில்லை யென்பதற்கொப்ப நாம் அடையவேண்டிய இவ்வுலக போகபாக்கியங்களுக் கெல்லாம் பொருளல்லவோ பிரதான காரணம். அதைச் சம்பாதிக்க வேண்டிய மார்க்கங்களைக் கைப்பற்றுதலைவிட்டு, நமக்கு அனாவசியமானவையும் தரித்திரத்தை யதிகமாக்கக் கூடியவையுமான வழிகளில் பிரவேசிப்பதா சீர்திருத்தம்?

ஒரு ரூபா $1\frac{1}{2}$ ரூபாய்க்குக் கிடைக்கும் நமது நாட்டு வஸ்திரத்தைக் கட்டுவதை விட்டுவிட்டு, நமது கைத்தொழிலை யழியவிட்டு, இங்கிருந்து பஞ்சாய்ப்போய் மேல்நாட்டிலிருந்து துணியாய்த் திரும்பி வருவதை யதிக விலைகொடுத்து வாங்கி தையற்காரனுக்கு 1, $1\frac{1}{2}$ கூலி கொடுத்துத் தைத்து மாதம் 15 ரூபாய் சம்பாதிக்கிறவனும் ஒரு காற்சட்டையை மாட்டிக்கொள்வதுதானா நாகரீகமும் சீர்திருத்தமும்? இதிற் செலவு இதுமட்டுமல்லவே. வேஷ்டியை நாமே தோய்த்துக் கொள்ளலாம். காற்சட்டைக்கோ குறைந்தது 1 அணாவாவது கொடுத்துதான் சலவை செய்விக்க வேண்டும். காற்சட்டை போட்டால் அதற்குத் தகுந்தபடி மேஜோடு, பூட்ஸ், காலர், கழுத்துப்பட்டை, ஓபன்கோட் முதலிய யாவும் வேண்டும். தேசாசாரப்படி குளிர் நாட்டிற்கு அவசியமாக வேண்டுமென்று அவற்றை யணியும் ஒரு ஐரோப்பியனுடைய சராசரி வருமானமென்ன? நம் வருமானமென்ன?

அரையணாகொடுத்து மழுங்கச் சௌளம் செய்துகொள்வதை விட்டு, நமது தேசாசாரப்படி ஆண் லட்சணமுமின்றி பெண் லட்

சணமுமின்றி 2 அணு 3 அணு கொடுத்து ஒருபக்கம் கால்மயிரை யும் ஒருபக்கம் அரைமயிரையும் ஒருபக்கம் அரைக்கால் மயிரையும் கத்தரித்துக்கொள்வது தானு ஆசாரச் சீர்திருத்தம் ?

சரியாய்ப் பன்னிரண்டு வயதுகூட ஆகாதப் பொடியன்களும் மேல்கண்ட வேடமணிந்து பாடசாலையைவிட்டு வெளிப்பட்டதே புத்தக மூட்டையைக் கக்கத்தில் இடுக்கிக்கொண்டு, ஸிகரெட் டையோ, பீடியையோ, வாயில்பிடித்துக்கொண்டு நடுக்கடைவீதிகளி லும் டிராம் வண்டிகளிலும்கூட சற்றுவது கூச்சமின்றி தலைநிமிர்ந்து செல்கிறார்களே. இதுதானு சீர்திருத்த மடைதல் ?

இந்தக் கேடான செய்கைகளை யெல்லாம் இவர்கள் தகாதன வென்று மதித்துச் செய்தாலும் சற்று பாதகமில்லையே. ஏனெனில் ஒரு காரியத்தைக் குற்றமான தென்றுணர்ந்து ஒருவன் செய்வானு யின், அவன் மனச்சாட்சி உறுத்துவதால் காலக்கிரமத்தில் அவன் அதைச்செய்யா தொழிவனென எதிர்பார்க்கலாகும். இவர்களோ இப்படித் தலைகீழாய் நடப்பதே நாகரீக விர்த்தியென்றும், சீர் திருத் மென்று மல்லவோ பெருமையோ டெண்ணி நடக்கிறார்கள். நாம் செல்லுமிடம் பள்ளம் பள்ளம் என்று எண்ணிச் செல்பவன் ஒரு சம யம் பெரிய பள்ளத்தைக் காணும்போதேனும் அஞ்சித் திரும்பிவிட லாகும். அப்படிக்கின்றி நாம் செல்லுமிடம் மேடுமேடு என்று செல்பவன் கடைசியில் தலைகீழாய்ப் பாதாளத்தி லமிழ்ந்து மடியும் போதல்லவோ இது பள்ளம் என்று அறியப் போகிறான். பிறகு சிந் தித்துப் பயனென்னை ?

நாம் செல்வத்தைச் சம்பாதிக்க வேண்டியதற்காக நமது நாட் டுச் சிறுவர்கள் பல சாஸ்திரங்களை யுணர்ந்து பலதுறைகளில் பயிற்சி யடையவேண்டும். வர்த்தகம் இன்னும் எவ்வளவோ அதிகமாய் வேண்டும். அன்னிய நாட்டிலிருந்துவரும் பயனற்ற சாமான்களின் வெளிப் பகட்டிற்கு மயங்கி அதிக விலைகொடுத்து அவற்றை வாங்கி கௌரவமா யெண்ணி யுபயோகிப்பதை விட்டொழித்து, நமக்கு வேண்டிய அவசியமான சாமான்களை நம் நாட்டிலேயே செய்து கொண்டு அதனாலுண்டாகும் இலாபத்தை நாமே யடையவேண்டும். அன்றைக்கல்லவோ நாம் சீர் பெறலாகும்.

அதை விட்டுவிட்டு குறைந்த வருமான முடைய நாம் நமக்குத் தகாதனவும், நமது ஆசாரத்திற்கு விரோதமானவையும், வருமானத் திற்கு மேற்பட்ட செலவையுடையவையுமான வழிகளில் பிரவேசிப்ப

தால் நமக்குத் தீமை யுண்டாகுமேயன்றி நன்மை யொருபோதும் கிடைக்காதென்பது நாம் கூருமலே விளங்குகிற தன்றோ. சீர்திருத்தம் சீர்திருத்தம் என்று முன்வந்துள்ளோர் மேற்கூறிய குறைகளை முன்னடி முளையிலேயே கிள்ளியெறிய முயன்றாலன்றோ நமது நாடு முன்னுக்கு வரும்.

சீர்திருத்தம் என்ற பெயரோடுவந்து வெறும் தீங்கை விளவிக்கத்தக்க அவ் வழக்கங்கள் தம் மக்களிடம் அணுகாவண்ணம் பெற்றோர் ஜாக்கிரதையோடு கவனித்து வரவேண்டும்.

மாணவராகிய சகோதரர்களே! நீங்கள் இதை யவசியமாய்க் கவனித்து நடக்கவேண்டும் உங்களால்தான் அவசியமான சீர் திருத்தம் நமது நாட்டில் நிலைத்தோங்க வேண்டும். குணத்தைக் கைக்கொள்வதில் சற்று ஆலசியமாயினும் குற்றத்தை மட்டும் உடனே களைதல் வேண்டும். எச்சரிக்கை! எச்சரிக்கை!!

---

## ஒரு முக்கிய அறிவிப்பு

இப்பூவுலகில் மனிதருடைய சுபாவம் பலவகையாயிருக்கிறது. ஒருபொருளே சிலருக்குப் பயனுடையதாய்க் காண்கிறது சிலருக்குப் பயனற்றதாய்க் காண்கிறது. இதுகாறும் நமது சஞ்சிகையிலுள்ள விஷயங்கள் நமது தமிழ் மக்களுக்கு இம்மை மறுமையிலும் மிக்க பயன் தரத்தக்க நன்மார்க்கங்களைப் போதிக்கத்தக்கனவைகளாகவே இருக்கின்றனவென்று கல்வியாளரும், ஆன்றோருமாகிய எண்ணிறந்தபேர் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருக்கின்றனர். இன்னும் வெளியிட்டுவருகின்றனர். அவ்வாறிருக்க ஒருவர்,

“உங்கள் சஞ்சிகையை நாங்கள் வாசிக்கிறதேகிடையாது, அதிலென்னவிருக்கிறது கெடியாரம் கிடியாரம்தான் இருக்கிறது. எங்கோவொன்று கடைக்குப் போகிற போக்காய் என்னமோ கூறுகிறது” என்றார்.

இத்தகைய அபிப்பிராயமுடையோரும் இருக்கிறார்களென்பதை நினைக்க நமக்கு மிக்க வியப்புண்டாகிறது. உலகில் பயனற்ற பொருளென்பது ஒன்றில்லை. ஆனல் ஒருவன் கண்ணைத் திறந்து அறிவை யூன்றிப்பார்த்தால் எதிலும் ஏதாவது பயனையே காண்கிறான். நாம் எவ்வித மனே பாவத்தோடு ஒன்றைப் பார்க்கிறோமோ அவ்வாறே அது நன்மையுடையதாகவும், தீமையுடையதாகவும் தெரிகிறது. எதைக்கண்டாலும் முன்னே அதிற்குற்றமேதாவதிருக்கிறதாவென்று பார்ப்போர்க்கு எல்லாம் குற்றமாகவேதான் தோன்றும். குணம் அவர்களுக்கு ஒருபோதும் புலப்படாது. குற்றம்பார்க்கிற் சுற்றமில்லை. அசேதகமான குக்கிடமன்றோ தான் கிளறுவது குப்பையேயெனினும் அதிலும் மறைந்து கிடக்கும் சிறு தானியமணிகளையும் தான் உண்ணத்தக்க வஸ்துக்களையும்மட்

டுமே பொறுக்கிக்கொள்கிறது. ஆதித்தனொளி வெண்மையென யாவருங்காண அதை மஞ்சளாகக் காணும் சிலரும் உலகிலுள்ளர். ஆது யார்குற்றமென வான்றோ ரறிவர். அறிவாளிகள் எதிலும் நன்மையையே காண்பார்கள். நமது சஞ்சிகை வெளிவந்துலவும் ஒன்றரைவருடகாலமாக கற்றுணர்ந்தோர் பலர் அதைப்பற்றி புகழ்ந்தே தங்கள் அபிப்பிராயங்களை வெளியிட்டிருப்பதால் அதிற் பயன்காணக் கூடாதவர்களது அபிப்பிராயத்தைப்பற்றி நாம் கவனிக்கவேண்டிய அவசியமின் றாயினும், நமது சஞ்சிகையின் க்ஷேமமாகிய பொது நலங்கருதியே இம்மட்டே னும் கூறவேண்டிய கடமைப்படி கூறினோம்.

## இன்னொருவிஷயம்.

நமது சஞ்சிகையில் எழுதப்படும் விஷயங்கள் சொல்ப கல்வியுடையோரும், தெரிந்துகொள்ளும்வண்ணம் தெளிவான நடையில் எழுதப்படுவதால் யாவர்க்கும் பயன்தரக்கூடியனவாக விருக்கின்றனவென்று பலரும் கூறியிருக்கிறார்கள். அதைக் கருதியே விஷயதானம் புரியும் கல்வியாளரையும் அவ்வாறு நடையில் எழுதியனுப்புமாறு நாம் கோரிக்கொண்டிருக்கிறோம்.

சிலர் இச்சஞ்சிகையின் தமிழ்நடை உயர்ந்ததாயில்லையென்று குறைகூறுவ தாய்க் கேள்விப்படுகிறோம். அதிலும் இரண்டொருவர் நமக்கு உயர்ந்த நடையில் எழுத வியலாதென்று கருதுகிறார்களென நினைக்கவேண்டியிருக்கிறது. இத் தகைய விஷயத்தில் "நாம்" என்றவரையில் ஒருவருடைய அபிப்பிராயமும் நம் மனதில் தாக்காது, நம்மை ஒருவித்வானாகப் பிறர் மதிக்கவேண்டுமென்று கோர வேண்டிய அவசியம் நமக்கு எள்ளளவேனும் இல்லை. நாம் நிரக்ஷரகுட்சியென்று யாவரும் கூறினும் அதுவும் நமக்கு ஒன்றே.

இப்போது நமது சஞ்சிகைக்கு உயர்ந்த நடை யவசியமா அல்லது நலமா வென்பதையே நாம் கவனிக்கவேண்டும். அப்படி யவசியமாயின் உயர்ந்த நடைத் தமிழ் நம்மிடமின்றேல் விலை கொடுத்தாவது வாங்கிக்கொள்ள வேண்டியதே.

இப்போது நாம் இலக்கண இலக்கியங்களைக் கற்பிப்பதற்காக வென்றே இச்சஞ்சிகையைத் தொடங்கவில்லை. உயர்ந்த நடையிலுள்ள விஷயங்களை இலக் கிய விலக்கணப் பயிற்சியுடைய கற்றோர் மட்டுமே வாசித்துப் பொருளறியக் கூடியவர்கள். அதனுடைய இனிமையையும் அவர்களே யறிந்தனுபவிக்கவல்லார். ஏனையோர்க்கது சற்றும் இனிமையில்லாததாகவே தோன்றும். கற்றோர் அத் தகைய விஷயங்களை வாசித்து, "பேஷ், மிக்க இனிமையான தமிழ், படிக்கப் படிக்கச் சுகமாயிருக்கிறது" என்று ஏனைய அறுசுவையை யனுபவிப்பது போல் தமிழின் மதுரத்தையும் சுவைக்கிறார்களே யன்றி மற்றபடி அவற்றி லுள்ள விஷயங்கள் பெரும்பாலும் அவர்கட்குத் தெரிந்தேயிருக்கும். ஏனெனில் அவர்களும் நல்ல கல்வியாராய்ச்சி பெற்றிருந்தால் தானே அதன் பொருளை யுண ரப் போகிறார்கள். அவ்வாறு நாம் கற்றறிந்த வித்வான்களுக்கு தமிழமிழ்தச் சுவையாகிய விருந்தளிக்க வெண்ணியாவது, நாம் உயர்ந்த நடையில் தமிழை எழுத வல்லமையுடையேம் என்று நமது கல்வித்திறனைக் காட்டக் கருதியாவது,

நமது தமிழ்க் கல்வியைப் பிறர் நன்குமதித்துப் புகழவேண்டுமென்று கருதி யாவது இச்சஞ்சிகையை வெளியிடவில்லை. இதன் நோக்கம் என்னையெனின்:—

1. நமது முன்னோர்கள் ஏற்படுத்தியுள்ள மதாசார ஒழுக்கங்களையும், இலௌகீக ஆசார ஒழுக்கங்களையும் நமது சந்ததியார் நன்கறிந் துணரச்செய்தல்,

2. காலத்திற்குத் தக்கவாறு அவற்றில் நாம் அவசியமாய் அடையவேண்டிய சீர் திருத்தங்கள் இன்னவையென்றும், தவறான சீர்திருத்தம் இன்னவையென்றும் நம்மவரை நன்குணரச் செய்தல்,

3. மற்ற நாட்டினரைப்போல் நாம் முன்னுக்கு வந்து, நாம் இழந்திருக்கும் சீரையும் சிறப்பையும் அடையவேண்டுவதற்காக நாம் செய்யவேண்டிய காரியங்கள் இன்னின்னவை யென்று நமது சந்ததியார்க்குப் போதித்தல்,

4. நம் தாய் பாஷையாகிய தமிழ்ப்பாஷையின் சிறப்பையும், அதனை அலட்சியஞ்செய்வதால் விளையக்கூடும் தீங்கினையும், அதைப்போற்றி வளர்ப்பது நமது முன்னேற்றத்திற்கு அவசியமென்பதையும் நமது மக்கள் அறிந்து ஒழுகச் செய்தல்,

ஆகிய இத்தகைய விஷயங்களேயாகும். இப்போது நாம் கூறும் விஷயங்களை நமது சிறுவர், சிறுமியர், ஆடவர் யாவரும், கற்றோர் முதல் பாமரரும் எளிதில் கஷ்டமின்றி உணரவேண்டும். அப்படிக்கின்றேல் நம்முயற்சி ஒருபோதும் கைகூடாது. இவ்விஷயங்களை உயர்ந்த தமிழில் வரைந்தால் எவ்வாறு பயன்தரும்.

நமது முன்னோர் அருமையான சாஸ்திரங்களையெல்லாம் உயர்தரமானபாக்களாகவே எழுதிவைத்திருக்கின்றனர். அதை இலக்கிய இலக்கண ஆராய்ச்சியுடைய கற்றோரே வாசித்துப் பொருளறியத்தக்கவர். மேனாட்டில் எல்லா சாஸ்திரங்களும் வசனநடையிலேயேயுள்ளன. ஆதலால் சாதாரணமாய் எழுதப்படிக்கத்தெரிந்த எவரும் அவற்றை உணர்ந்து அவ்வழியடைந்த ஞானத்தால் பலவகையிலும் தேர்ச்சிபெற்று முன்னுக்கு வந்திருக்கிறார்கள்.

ஆகையால் நாம் கூறும் விஷயம் எளிதில் உணரத்தக்கதாயிருத்தல்வேண்டும். திருட்டாந்தமாய்ச் சில சஞ்சிகைகள் சற்று உயர்ந்த நடையில் எழுதப்படுகின்றன. ஆனால் அவை கொஞ்சம் கற்றுணர்ந்தோர்க்கு மட்டுமே இன்னும் அதிகக் கல்வியைப் புகட்டக்கூடியனவேயன்றி சொல்ப கல்விமட்டுமுடையோர்க்குப் பயன்படா. ஒரு நாடு முன்னுக்குவரவேண்டுமாயின் எல்லா உபகரணங்களும் வேண்டும். அதுபோல் அத்தகைய உயர்ந்தநடைச் சஞ்சிகைகளும் வேண்டியதே. ஆனால் எல்லாம் அப்படியேயிருப்பின் ஒருபயனுமுண்டாகாது. நம்மவர் மேலோங்குவதின் நோக்கமாக இக்காலத்தில் எழுதப்படும் நூல்கள் பெரும்பாலும் யாவரும் அறிந்துணரத்தக்கத் தெளிவான நடையில்தான் எழுதப்படல் வேண்டும் என்றே கற்றுணர்ந்த மேலோரனைவரும் ஒருதலையாய் அபிப்பிராயங்கொள்கின்றனர். நாமும் அதைப்பற்றிநடத்தலே நன்மையைப் பயக்கும்

என்பதே நமது துணிபு. அதைவிட்டு ஒவ்வொருவர் அபிப்பிராயப்படிக்கும், நடக்கவேண்டுமென்று கருதினல் தந்தையும் தனயனும் கழுதையைத் தோள் மேல் சுமந்துசென்ற கதையாகவே முடியும்.

---

## "ஐயமிட்டார் கெட்டார்?"

"ஐயமிட்டார் கெட்டார்?" என்பது ஒரு பழமொழி. சிலர் இப்பழமொழியை, அறியாமையால், "ஐயமிட்டார் கெட்டார்" என்பதனை, பிச்சையிட்டவர்கள் கெட்டார்களெனப் பொருள் கொள்கின்றனர். அவ்விதம் பொருள் கொள்ளாது ஐயமிட்டு யார் கெட்டார்? (அதாவது தருமமிட்டு அதனுல் கெட்டுப்போனவர்கள் யார்?) எனப் பொருள் கொள்ளுதலே தகுதியாம். ஆனுல் தனக்குள்ளப் பொருள்களெல்லாவற்றையும், பிச்சையிட்டு பொருளெல்லாமழிந்து அவர்களும் கெட்டுவிடுவார்களே என்று கேட்பாயாகில், அவ்விதம் தமக்குள்ளப் பொருள்களெல்லாவற்றையும் பிச்சையிடும்படி சொன்னவர் யார்? ஒருவருமில்லை. வருவாயுட்கால் வழங்கி வாழ்தலென்றார் பெரியோர். அதாவது, தனக்குள்ள சொத்தில் அல்லது தனக்குவரும் வருவாயில் நாலில் ஒரு பங்கெடுத்து அந்த ஒருபங்கை உத்தம தருமத்தில் செலவிட வேண்டுமென்பதே.

ஆன முதலி லதிகம் செலவானுல்
மானமழிந்து மதிகெட்டுப்-போனதிசை
எல்லார்க்குங் கள்ளனுய் ஏழ்பிறப்புந்தீயனுய்
நல்லார்க்கும் பொல்லனு நாடு.

வரவுக்கு அதிகமாகச் செலவு செய்பவன் பழிபாவங்களை யடைபவன் ஆதலின், வரவுக்கு தக்கபடி செலவு செய்ய வேண்டு மென்பது நீதி.

"வளவனுயினும் அளவறிந்தழித்துண்." அளவறியாமல் தன் கையிலுள்ளப் பொருள் முழுவதையும் செலவிட்டால் பின்னொருகாலத்தில் அது தனக்கே தீங்காய் முடிவது நிச்சயம். இதுபற்றியே, நமது ஞானத்தாயாகிய ஔவை மூதாட்டியாரும் "அறஞ்செயவிரும்பு" (தருமத்தைச்செய்ய விருப்பங்கொள்) என திருவாய் மலர்ந்தருளி யிருக்கின்றனர். ஆகையினுல் ஒவ்வொருவரும் ஐயமிட முயலவேண்டும்.

"அன்றறிவா மென்னுதறஞ் செய்க மற்றது
பொன்றுங்காற் பொன்றாத்துணை."

என, சங்கப்புலவரும் நெஞ்சங் கலங்கும் பங்கமுறுமாறு சிற்சில வினுக்கள் தொடுத்தவரும், தெய்வத்தன்மைவாய்ந்த சங்கப்பலகையைப் பொதுநீக்கித் தமது பொதுமறை ஒன்றிற்கே சிறப்பாதனமாகும்படிச் செய்தவரும், குறிப்பு மொழியால் இமையவரது ஐயத்தையும் நீக்க வல்லதெய்வப்புலமை வாய்ந்தவரும், இல்லறத்திருந்தே தொல்லறத்தைக் காத்தவருமாகிய திருவள்ளுவ நாயனுர் திருவாய் மலர்ந்திருப்பதனை நாம் உற்றுநோக்குவோமாயின், நம்மா லியன்றவரைக்கும் தருமத்தைச் செய்யாதுவிட மனங்கொள்ளோம்.

ஆன்மாக்களெல்லாம் சகலலோக நாயகனுகிய கடவுளுக்கு மீளாவடிமைகள். தமக்குத்திருத்தொண்டுசெய்து பிழைக்கும்பொருட்டே அவர் இவ்வருமையான மனிதசரீரத்தைக் கொடுத்தருளினர். மனிதர்களிடத்துள்ள பொருள்களெல்லாம் அவர் கொடுத்தருளியதே. இவ்விதமாக பொருள் கொடுத்தருளிய கடவுளுடைய் திருவுளக்கருத்துயாது? பொருளுடையார் தங்களுக்கும், பிறர்க்கும், சரீரசுகத்தின்பொருட்டும், ஆன்மசுகத்தின் பொருட்டும், செலவிட வேண்டுமென்பதே அவருடைய திருவுளக்கருத்து. ஆன்மசுகமே மிகமேலாகிய சுகம், அவ்வான்ம சுகத்துக்குக் காரணம் சரீரசுகமே. ஆனதுபற்றி சரீரசுகத்தின் பொருட்டுச் செலவு செய்வதும் ஆன்மசுகத்தின் பொருட்டேயாம். ஆகையினுல் நாமெல்லோரும் இவ்வுண்மையைத்தெளிவாய் அறிந்து, தமக்குக்கடவுள் கொடுத்தருளிய பொருளை மேல்கண்ட விஷயங்களில் செலவிடல் வேண்டும். அவ்விதம் செய்யாது அவர் திருவுளக்கருத்துக்குமாருக வீண்விரயம் செய்வோரும், தரைக்குள் சேமித்து வைப்போரும் கடவுளால் தண்டிக்கப்படுவர்.

தங்களால் கூடியவரைக்கும் கஷ்டப்பட்டுப் பொருள் சம்பாதித்து, தாங்களும், தங்கள் தாய்தந்தையரும், புத்திரச் சிறுவர்களும், உண்ணுதும், உடுக்கா தும், ஏழைகளாகவிருக்கும் தங்கள்பந்து மித்திரர்களுக்குக் கொடாதும், தருமமிடாமலும், தரையில் புதைத்துவைத்தோ, அல்லது சுவரில் மூடிவைத்தோ, எவ்விதத்திலோ பிறரறியாமல் மறைத்துவைத்து விடுகின்றுர்கள். இவர்கள் இறந்தபின் இப்பொருளை யாவர் அனுபவிப்பரோ அறியேம்.

பாடுபட்டுத் தேடிப் பணத்தைப் புதைத்துவைத்துக்
கேடுகெட்ட மானிடரே கேளுங்கள்-கூடுவிட்டிங்
காவிதான் போயின பின்பாரே யனுபவிப்பர்
பாவிகா ளந்தப் பணம்.

பூமியிலே புதைத்துவைக்கப்பட்ட பணம் வைத்தவர் இறந்தபின் அவருக்குதவாமற் போவதுமன்றிப் புதைத்தவிடந் தெரிந்து எடுக்கக் கூடாமையினுலே பிறருக்கும் உதவாமற்போம்.

சிலர், தாங்கள்சம்பாதித்தப்பொருளைத் தங்கள்பிள்ளைகளுக்கென்று வைத்துவிட்டுத் தங்களாயுள் பரியந்தம் ஒரு காசளவாகிலும் தருமமிடாமல், பாவிகளாய் இறக்கின்றனர். இவர்களுடைய பிள்ளைகள் இப்பொருளே நிலையெனக்கருதி கல்வியைக் கற்காது, அசட்டை செய்துவிட்டு சோம்பேறிகளாய்த் திரிந்து, தம் தந்தையார் சேமித்துவைத்தப் பொருளை, தாம்கொண்ட கன்னி வீட்டிலிருக்க, தாசி, முதலான பொதுப்பெண்கள் விஷயத்தில் செலவிட்டு, சிறிதுகாலத்திற்குள்ளேயே வறியர்களாய்,கடன்பட்டு, குலாலன் சக்கிரத்திலகப்பட்ட மண்போல் கடன்காரர் வலையிற்சிக்கி தப்பவழியின்றி தவிக்கின்றுர்கள். அந்தோ! இவர்களின் அறியாமை என்னே! விந்தையினும் விந்தையே.

சிலர், பலரறிய மாங்கல்யதாரணம் செய்துகொண்ட பெண்டிரையும், அவளாலுண்டானபிள்ளைகளையும், கைவிட்டுத் தாசிகளுக்குழைத்து அவர்களையே நம்பித் தங்கள் திரவியத்தை எல்லாம் அவர்களுக்கே செலவிட்டுப்பொருளெல்லாமழிந்த

பின் அவர்களால் அவமதிக்கப்பட்டு, தன்னை நம்பின மனைவி மக்களைக் காப்பாற்ற திறமையில்லாதவர்களாய், அவர்களைப் பார்க்கவும் முகமில்லாதவர்களாய், வெட்கப்பட்டு கடைசியில் தன் மனையாளிடமே வந்து, அவர்களால் காப்பாற்றப் படுகின்றனர்.

சிலர், தாங்களுண்ணுவதிலும், உடுப்பதிலும், ஆபரணம் பூணுவதிலும், கூத்து பார்ப்பதிலும், சங்கீதம் கேட்பதிலும், தொழில்செய்து பிழைக்கச் சக்தியிருக்கவும் அவ்விதம்செய்யாத சோம்பேறிகளுக்குத் தானமிடுவதிலும்பொருளைச் செலவழிப்பதே மனிதப்பிறப்பாலாகிய பயனென்று நினைத்து எல்லாப் பொருள்களையும் அவைகளின் பொருட்டே செலவிட்டு, மறுமையில் மீளா நரகத்திற்காளாகின்றனர்.

பசி தாகங்கொண்டு தங்கள் வீட்டில்வந்து யாசிக்கும் ஏழைகளுக்கு ஜலமுங்கூட கொடுக்க மனமில்லாமல், சிடு சிடு வென்று அவர்கள்மேல் கோபங்கொண்டு, அவர்களை வெருட்டுகின்றனர். சிலர் வீட்டுவாயிலிலே ஒரு குச்சு நாயைக் கட்டியோ அல்லது அதற்குப்பதிலாக ஒரு சேவகனை வாயலில் நிறுத்தியோ, வரும் ஏழைகளை உள் நுழையாதபடி செய்விக்கின்றனர். இவ்விதப் பிரபுக்கள், மகோற்சவ காலங்களில், பிராம்மண சந்தர்ப்பணையும், ஏழைகளுக்கு அன்னமு மளிப்பதாய்ப் பறையறைவித்து, இடமும் காலமும் வரையறுத்துக் கொடிகட்டித் திரளான ஏழைஜனங்களை ஒருங்குகூட்டி, ஓரிடத்தில் காக்க வைத்து, தொழில்செய்து ஜீவிக்கவல்லவர்களாயும், சரீர புஷ்டியுள்ளவர்களுமான பிராம்மணர்களுக்கு முகமலர்ச்சிகாட்டி கும்பிட்டு, இன்சொல் சொல்லி, நெய், வடை, பாயாசம், தயிர் முதலியவற்றோடு அன்னங்கொடுத்தும், தாம்பூலாதிகளும், சந்தனமும், நபர் ஒன்றுக்கு ஒன்று, அல்லது அரைரூபாயும், கொடுத்து மரியாதையுடன் அனுப்பிவைக்கின்றார்கள். இவர்களுண்டுபோகும் வரைக்கும் காத்துக்கொண்டிருந்த ஏழைஜனங்களை, ஆடுமாடுகளைப்போல் ஓரிடத்திலடைத்துச் சேவகர்களை வாயிலிலே நிறுத்தி, இரண்டு மூன்றுயாமம் கழித்து, அவர்களுக்கு கால்வயிறுக்கும் கம்மியான அன்னத்தையளித்து, ஒருகையிலே கோலையும் மற்றொருகையில் பணமும் எடுத்துக்கொண்டுபோய், முகமலர்ச்சி காட்டாமலும் இன்சொற்களைச் சொல்லாமலும், நபர் ஒன்றுக்கு காலணாவிகிதம் வீசியெறிந்து, மேல்விழுந்தெடுக்கின்ற ஏழைகளைக் கோல்கொண்டு புடைத்து துர்வார்த்தைகளினால் வைது, கழுத்தைப்பிடித்து நெட்டித் தள்ளுகின்றனர்.

ஆதலினாலே, இவ்வித தருமமெல்லாம் சில்லிப்பானைக் கொப்பாகிய (சில்லி = ஓட்டை) அதமதருமாம். "நாடிவந்து நயந்தவரைக் கைவிடுதல் நன்றன்று" தருமம் செய்யப்புகுவோர், தருமங்களையும், தருமம் செய்யும் கிரமங்களையும், கற்றறிந்து கொண்டாயினும், கற்றறிந்தவர்களிடத்தில் கேட்டறிந்து கொண்டாகிலும், விதிப்படிச் செய்யக்கடவர்கள்.

நல்லோரிணக்கமும், நல்லறிவு முடையவர்கள் தங்கள் பிதாமாதாக்களுக்கும், பெண்டிர் பிள்ளைகளுக்கும், வேண்டியவரைக்கும் வைத்துக்கொண்டு, மற்ற

தைத் தங்கள் ஆன்மசுகத்தின்பொருட்டு உத்தம தருமங்களிலே, செலவிடுவார்கள். ஆன்மசுகத்தை யடைவதுமாத்திரமின்றி, தற்காலத்திலும், பிற்காலத்திலும், அறிவுடையோர் வாய்ப்படும் நிலையுள்ள கீர்த்தியையும், புகழையும் அடைவார்கள்.

(தொடரும்)

---

## குலம்பெரிதா? குணம்பெரிதா?

கிடைத்தற்கரிய மானிடஜன்மம் பெற்ற நம்மில் பலவகுப்புகள் ஏற்பட்டிருப்பதை அனுபவமாய்க் காண்கிறோம். அவற்றில் பொதுவாக, குலம் பெரிதா? குணம் பெரிதா? என்பதை நாம் ஆராய்வது மிக்க அவசியமே. இதைப்பற்றி ஆன்றோர்.

"சாதி யிரண்டொழிய வேறில்லை சாற்றுங்கால்
நீதி வழுவா நெறிமுறையின்-மேதினியில்
இட்டார் பெரியோ ரிடாதா ரிழிகுலத்தோர்
பட்டாங்கி லுள்ள படி"

என்று சொல்லியிருக்கின்றனர். அதாவது இரப்போனுக்கு கொடுப்பவனே மேலோன், கொடாதவன் கீழோன் என்பதே இதன் கருத்து. இதைக் கவனிக்குமிடத்துக் கொடுக்கக்கூடிய குணமே பெரிது என நன்குபுலப்படுகிறது. மேலும்,

"நூற்பாற்குலத்தின் மேற்பாலொருவன்
கற்றிலனாயின் கீழிருப்பவனே" என்றும்,
"எக்குடிபிறப்பினும் யாவரேயாயினும்
அக்குடியிற் கற்றோரை வருகென்பர்" என்றும்,
"கல்லாவொருவன் குலநலம்பேசுதல்
நெல்லினுட்பிறந்த பதராகும்மே" என்றும்

சொல்லியிருக்கின்றனர். இதனால் கல்வி விசேஷமெனினும் குணமும் பொருந்தியிருப்பது மிக்க சிலாக்கியமே. இதைப்பற்றி இங்கு ஒரு சரித்திரத்தை கவனிப்போமாக. அதாவது,

நீச்சஜாதியில் நந்தனார் என்னும் ஒருபுலையர் பிறந்தார். அவர்சிறுவயதிலேயே சதா கடவுளின்மேல் மனதைச் செலுத்திவந்தார். இவருடைய பெற்றோரும் மற்றும் உறவினரும் அவர் அவ்வாறு நல்ல குணமடைந்திருப்பதைக்கவனியாது அவர்களுடைய குலாசாரப்படி நடக்கும்படி பலவாறு போதித்தனர். அதற்கு நந்தனார் அவ்விதம்நடப்பது மிக்ககெட்டது எனப் பலநீதிகளைச்சொல்லி சாக்ஷாத் கருணைக்கடலாகிய நடராஜக்கடவுளைத் தியானிக்கும்படி அடிக்கடி சொல்லி வருவார். இவர் இவ்விதம் சொல்வதைப்பார்த்து அவர்கள் அவரது பண்ணைக்கு யஜமானராகிய அந்தணரிடம்போய் நந்தனாருடைய விருத்தாந்தத்தைச் சொல்லிக்கண்டிக்கும்படி வேண்டினர். அவ்வாறே அவ்வந்தணர் நந்தனாரைப்பல விதமாய்த் திட்டியும் அடித்தும் கேளாமல் சதாகடவுளையே தியானிப்பதும் சிதம்பரம் என்னும் திவ்யஸ்தலத்திற்கு போகவேண்டுமென பலவாறு கெஞ்சிக்கேட்

பதையும் கண்டு நந்தனுரைநோக்கி, நீ சிதம்பரம் போவதாயிருந்தால் நமது வயல்கள் பூராவும் நடவுநட்டு அறுத்தடித்து எனக்குச் சேர்ப்பித்தபின், உன் இஷ்டப்படி சிதம்பரம்போக விடையளிப்பேன் என்றனர். நந்தனர் கடவுளைத்தியானிக்க எல்லாம்வல்ல எம்பிரான் நந்தனருடைய நற்குணதிசயத்தை வியந்து, அவ்வாறே ஒருராத்திரிக்குள்ளாக அந்தணர் நந்தனருக்கு ஆக்ஞாபித்தபடி நிறைவேற்றினர். பிறகு நந்தனர் அந்தணரிடம்வந்து வயல்களைப் பார்க்கும்படியாக அழைக்க, அந்தணர்வந்து, வயல்கள்நிறைய ஒருதினத்திற்குள் நடவுநட்டு விளைந்து நெற்கதிர்கள் சாய்ந்திருப்பதைக்கண்டு, அதியாச்சரியமடைந்து நந்தனருடைய சிவபக்தி குணதிசயங்களுக்காகக் கண்ணனும் எண்கண்ணனுங் காண்டற்கரியக் கடவுள் செய்த திருவிளையாடலுக்கு வியந்து நந்தனரைக் குருவாகக்கொண்டுஅவரிடம் உபதேசம்பெற்றுக்கொண்டு அவரைச்சிதம்பரத்திற்கனுப்ப, கடவுள் மூவாயிரதீக்ஷதர் சொர்ப்பனவஸ்தையிற்சென்று நம் அன்பனகிய நந்தனர்வருகிறார் அவரையெதிர்கொண்டழையுங்கள் என்று உத்தரவளித்தார். விழித்தவுடன் மூவாயிரவரும் எதிர்கொண்டழைத்துக்கொண்டுவர, நந்தனர் அக்கினியிற் குளித்துப்பின் கனகசபையிற் காலெடுத்தாடுங் கண்ணுதற்கடவுளைத்தரிசிக்க, கடவுளருளால் ஒரு சோதியுண்டாக அதிற்போய்க் கலந்தார் என அவர்சரிதம் கூறுகின்றது.

இதனுல் நேயர்களே! அவர் தாழ்ந்த குலத்திலுதித்தும் நல்ல குணவானக இருந்ததினுல் உயர்ந்தபதவியை அடைந்தார். ஆகையினுல் குலம்பெரிதா? குணம் பெரிதா? என்பது சொல்லாமல் விளங்குகிறது அன்றியும்—

நாம் தற்காலம் அனுபவமாக அறியக்கூடியதாவது நமது காருண்யமுள்ள கவர்ன்மெண்டார், (அறிவுடையொருவனை அரசனும் விரும்பும்) என்பதை நிதர்சனமாய் அறிய தாழ்ந்தகுலத்தி லுதித்தவனுயினும் வேற்றுமைப் பாராட்டாது கல்வியையும் நற்குணத்தையும்கண்டு உயர்ந்த உத்தியோகமளிப்பதை நாம் பிரத்தியட்சமாய்க் காண்கிறோம்.

ஆதலால் சகோதரர்களே! சகல ஜாதியாரிடத்திலும் சமரச அன்புபாராட்டி ஒற்றுமையோடு வாழவிரும்புவோமாக. மேலும்,

பிரதிமாதமும் அநேக மகான்களின் குணதியசங்களாகிய அளவில்லா ஆனந்தத்தை மேலுமேலும் அளிக்கவல்ல இவ்வரிய ஆனந்தபோதினியின் சந்தாதாரர்களாகிய நாமெல்லோரும் ஒற்றுமையோடு இவ்வானந்தபோதினியை ஆதரித்து, இதில் மாதந்தோறும் விஷயதானம்செய்யும் வித்வமணிகளும் கற்பகத்தருவையொத்த நமது பத்திராதிபராகிய ஸ்ரீமான் N. முனிசாமிமுதலியார் அவர்களும் நீடூழிவாழ்ந்து இவ்வானந்தபோதினியை இனிது நடைபெற இறைவனை இன்றும் என்றும் தியானிப்போமாக. சுபம்! சுபம்!! சுபம்!!!

---

## சசிவர்ணபோதம்

(250-ம் பக்கத் தொடர்ச்சி)

"ஹே வேதிய! நின் தந்தையார் நின்னை நீத்துத் தவத்திற் கேகிய காலமுதல் நீநுங்கிய விஷயரசங்கள் யாவும் உன் புந்தியில் எவ்வாறு பொலிகின்றன? இதில் ஏதேனும் உனக்கையமுளதோ?" என்றருளிய ஆனந்தசாகரத் தண்ணலை நோக்கிய அம்புலிவண்ணன் அங்கைகூப்பி அஞ்சலித்து நின்று அறைவதானான்:—

"ஹே! ஐயம்புதையா மெய்யறிவை யூட்டும் மேன்மையோய்! ஹே! சுகப்பிரம்மமுவக்குந் தூய! நான் என்னசொல்வது, 'சுவாமி! வயிறுவாடாது வல்லுணவை முட்டின்றி உண்டு அநித்தியமும் அற்பமுமான சிற்றின்பங்களை நயந்துசெய்து நாளொரு வண்ணமும் பொழுதொரு மேனியுமாய் வளர்ந்து மடமையெய்தி மறவழிச்சென் றுழலும் போக சித்தத்தோர் எவற்றினும் மயங்குவரல்லாது, பல விடங்களிற் படரவிடாது ஓர் பொருளிடத்தேயே மனத்தை யூன்றி ஒருமுகப்படுத்தி நாளொரு பக்தியும் பொழுதொரு ஞானமுமாய் மதியோடு வளர்ந்து, உத்தமமும் நித்தியமுமான பேரின்பப் பேற் றைப்பெருக்கி, நாளும் அறவழிச் சென்றுய்யும் ஏகசித்தத்தவருக்கு ஐயமேது. தேவே! சிறியேன் சிந்தை தெளியவோ, அல்லது தெரி யவோ தேவரீர் இவ்வாறு திருவாய்மலர்ந் தருளினீர். பெரியோர் சித்தங்கனிந்து செப்பிய தேவரகசியோபதேசங்களை உள்ளாழ்ந் தறிந்து கேட்டுவந்த சிந்தையூடும் ஐயமென்பதொன்று ஜனிக்குமோ? சுவாமி! மேலருள்வனவற்றை யருளவேண்டும்" எனச் சிரத்திற் குவித்த கரத்தனாய் நிற்கும் சசிவர்ணனை விழியாரப்பருகிய மாதவர் கூறுவார்:—

சீல! நீகூறுவது உண்மையே. ஆயினும் செவ்வனே தெளிந்து ஆய்ந்து அறிந்து விரிந்து பக்குவகாலம் வாய்க்கப்பெறும் மேதாவி களிற் சிலருக்குக்கூட அவ்வப்போது ஒருவாறான ஐயம் வந்தடுப்ப துண்டு. அவ்வையங்களை யாழ்ந்து பார்க்குங்கால் ஆன்றோர்க்கவை அவசியமின்றாம். ஆனாலும் அவைகளைத் தெரிந்து உள்ள ஐயத்தைப் பின் அகற்றவேண்டுவது ஈண்டு உனக்கு அவசியமாகிறது. அவ் வையவிசாரத்தைக்கேள்.

பிரபஞ்ச சிருஷ்டிகாலத்தே ஆதியில் தோற்றங்கள் உண்டான போது சராயுசம் முன்னரா? சனனம் முன்னரா? கோசமுன்னரா?

குரீஇ வகைய முன்னரா? சுவேதச முன்னரா? ஊர்வன முன்னரா? வித்து முன்னரா? விருட்சம் முன்னரா? என்றவாவும் ஐயங்களாம்.

சசிவர்ணு ! இவ்விசாரத்தைக்கேள். இங்கு ஆழ்ந்து கவனி. கட்புலனை யிங்குசெலுத்து. செவிப் புலனைச் சோரவிடாதே. நான் சொல்வனவற்றிற் சந்தேகந் தோன்றினும் அவ்வாறு தோன்றும் சந்தேகங்களைச் சொல். இவ்விஷயங்கள் எங்கும் நிகழ்வன. ஒருவாறு கணித்தியம்ப இயலாதன வென்ற இயலின. கவனித்துக் கேட்கத்தகுந்தன. வேறு, உத்தம !

எண்ணிலாச் சக்தி வாய்க்கப் பெற்ற ஓர் சித்தினலேயே இப் புவி முதலான சடபதார்த்தங்கள் ஆக்கப்பட்டன வென்பது பொது. ஆக்கப்பட்டன வென்னுங்கால், ஆக்கிய சித்திற்கு ஓர் எண்ணந் தோன்றி அதன்மேல் செயல் நிகழ்ந்திருக்கவேண்டும். ஓர் பொருளைப் பார்த்த பிறகுதான் எண்ணம் உண்டாவதென்னும் சங்கையானது பிரபஞ்சத்திலுள்ள சீவகோடிகளுக்கே யன்றி பிரபஞ்ச நிகழ்ச்சிக்கு முந்திய ஆதிசித்திற்குக் கிடையாதாகையால், மூலமாம் ஆதிசித்திற்கு (பிரபஞ்ச சிருஷ்டியைப் பற்றிய) எண்ணம் முந்தி, செயல் பிந்தியாம். பிரபஞ்சாதிகளை ஆக்கவேண்டு மென்றெண்ணியே, யாவும் தன் சக்தியைக் கொண்டு அமைக்கப்பட் டிருக்கின்றன. ஆக்கிய சடத்தோற்றங்களுக்கு ஓர் காலத்தே அழிவுண்டாமாதலின், உடனுக்குடனே அவைகளைக் கொண்டாக்கற்குரிய வித்தென்னும் சக்தியின் மூலாதாரமும் அச்சடங்களிலேயே பொருததி அமைக்கப்பட்டிருக்கின்றது. ஆகையால், மீண்டும் மீண்டும் மேன்மேலும் முறை முறையே விருத்தியாக்கற்குரிய வித்தென்னும் சக்தி அமைக்கப் பெற்றே, சடாதிப்பிரபஞ்சங்கள் ஆதியில் ஆக்கப்பட்டனவென் றறியவேண்டும்.

சசிவர்ணு ! தாவரமாதிய, தமக்குள்ளே வித்தென்னும் சக்தியால் வரும்பொருளைப் பருவகாலத்தே வாய்த்து முறையே விருத்தியாகப் பெற்று, புவியின் சார சக்தியினல் முளைத்தெழுந்தன. ஊர்வன முதலிய உஷ்ணசக்தி சீதசக்தி இவ்விரண்டுஞ் சேர்ந்த சுவேத சக்தியைத் தமக்குள்ளே பொலிந்து வளர்ந்து பக்குவகாலத்தே வாய்க்குந் திறல் பெற்றுப், பிறந்து தோன்றின. பறவை முதலிய அண்டசம், வித்து முதலிய சக்தியை முறையே தக்க காலத்தே தமக்குள் பொலிந்துவரப் பெற்றே பயக்கப்பட்டன.

சராயுசமென்னும் நடப்பன, கருப்பை சுக்கில சோணித சக்திகள் ஒருங்கே தமக்குள்ளுண்டாகி யௌவனத்தே பெருகி விருத்தியாகுஞ் சக்தி பெற்றே ஜனனமாயின வென்று கொள்ளவேண்டும்.

அப்பா! ஆதியில் சிற்சக்தியால் *முதன்முதலாக அமைக்கப்பெற்றது தோற்றங்களேயாம். முறையே அவைகளுக்குள்ளேயே பெருகி பிற்காலத்தே பக்குவமாவன பீஜங்களாம். இப்பீஜங்களால் மீண்டும் மீண்டும் உண்டாவன தோற்றங்கள். முறையே தோற்றங்களால் அவைகளுள் வளர்வன பீஜங்கள். இவ்வாறு வாழையடி வாழையாகப் பிறந்து வளர்ந்தழிவன என்றறியக் கடவாய். சசிவர்ணு! இப்போது நான் உனக்குச் சொல்லவேண்டியது இவ்வளவுதான். திறல் வாய்க்கப்பெற்று நீ திரிஞான முணருங்காலத்தே இஃதுண்மையன்றேல் அன்று இவ்வுண்மையை எளிதில் அறிவாய் என்றறைந்து மேல் அருள்வனவற்றை யருள்வதானார் அருந்தவர்.

ஹே! தெருளாமதி வண்ணச்சிறுவ! வேண்டிய அங்கங்களைத் தக்கவாறு அமைக்கப்பெற்று தரையின்மீது தள்ளுண்ட சீவகோடிகள் படிப்படியாய் வசிப்பதற்குரிய வசதிகளையும் நுகர்வதற்குரிய ஊண் பான ரசங்களையும், வளர்ச்சிக்குரிய பாலியம், யௌவனம், கௌமாரம், வார்த்திகேயம் முதலிய காலபேதங்களையும், ஆயுட் பிரமாணங்களையும் விதித்துத் தந்து முறையே சுருதி யுக்தி அனுபவங்களால் தாங்கள் புவியில் வந்து குதித்த உண்மையையும் மாயாசக்தியினாலேயே தம் மனத்துவைகிய மாயா சக்தியின் இயல்புகளையும் இன்னதென்றோர்ந்து தெரிந்து தெளிந்து தம் அறிவைத் துணைக் கொண்டணைத்து அகமாயையின் ஆட்டங்களை அடக்கி அகற்றி அறிவைப் பெருக்கி மேலோங்குவதற்குரிய கிரியாசாதனங்களும் தம் வாணுட்களைப் பெருக்கிக் கொள்ளற்குரிய யோகசாதனங்களும் பிறவும் விதித்துக் காட்டப்பட்டிருக்கின்றன.

இத்தியாதி வைபவங்களை அடைந்து வந்த மாந்தர் மனத்தைக் கலக்கிச் சுழற்றி ஓட்டிக் களைக்கத் தேய்த்துத் திரியச் செய்யும் மாயையின் திருவிளையாடல்களோ செப்பற்பாலதன்று. மறைத்து மறைந்து நிறைந்து நின்று விளங்கிய மாயையின் மகத்துவங்களால்

* முதன்முதலாக அமைக்கப்பெற்றது தோற்றங்களே என்பது ஸ்ரீமத் பாகவதம் மூன்றாவது ஸ்கந்தம் பத்தாவது அத்தியாயம் 13 முதல் 28 வரையுள்ள சுலோகங்கள். தோற்றங்கள் வேறாகவும் பீஜங்கள் வேறாகவும் உண்டாக்கி உலகத்தே யமைக்கப்பட்டதெனக் கூறுவாறுமுளர். அது புக்திமார்க்கத்திற்குப் பொருந்தாதென்க.

மாயவாரியிற் றள்ளப்பட்ட மாந்தர்களுடைய அசல சித்த நிலையா னது அசைவு பெற்று ஆடியோடித் திரிந்து அகத்தே யெரித்து *ஐங் கிலேசங்களை ஆங்கே உண்டாக்கி ஐம்புலன் வழியாய் உலகில் வெளி யேகி அலைவதால் மானிடருக்கு அளவிலா வெண்ணக் கிலேசங்க ளென்னும் அவா மிகுந்து எழுகின்றன. மிகுந்து எழுந்தோங்கும் பற்பல எண்ணங்களால் புவியிற்கண்ட தனக்கு வேண்டியவைகளை யடைந்து அனுபவிக்கும் வண்ணம் அவற்றிற்குத் தக்க செயல்கள் நிகழ்கின்றன. இச்செயல்களை கருமங்கள் எனப்படும். இவற்றில் நல்லறிவை முன்னோக்கி ஆராய்ந்து செய்து மேலோங்கும் செயல் களைப் புண்ணியச் செயல்களென்றும் அவித்தையால் மடமை மேலி ட்டு ஆராயாதும் அவசரமாயும் அகம்பாவத்தாலும் செய்து வரும் துற்செயல்கள் யாவும் பாபச்செயல்களென்றும் ஆக இருபிரிவுகளை யுடையன. (தொடரும்)

## "கேடுவருமுன் காத்தல் நலம்"

எனவே நாம் ஒருகாரியத்தைச் செய்யத்தொடங்கிச் செய்கையில், அக்காரி யத்திஞல் ஏதாகிலும் இடையூறுவருமாவென தீர்க்காலோசனைசெய்து அவ் விதத் தீங்கு சம்பவிப்பதற்கு முன்னமேயே அத்தகைய கேடு நேரிடாதபடி தடுக்கவேண்டுமெனப் பொருள்படும். அதாவது நாம் ஏதாவது ஒரு காரியத் தைச் செய்யவேண்டி எடுத்துக்கொண்டோமானுல்,

'எண்ணித்துணிக கருமம், துணிந்தபின்
பெண்ணுவ மென்பதிழுக்கு'

என்னும் ஆன்றோர் அமுதவாக்கினை ஆக்கினையாகக்கொண்டு எத்தகைய துன் பங்கள் வருமாயினும் அவ்வத்துன்பங்களையெல்லாம் முதலிலேயேவராமல் தடுத்துவிட்டு நமதுவேலையை முடித்தல்வேண்டும். அங்ஙனமின்றி, 'வாய் புளித்ததோ மாங்காய்புளித்ததோ' என்று மூடர் கூறுவதுபோல 'நாம் முத லில்தொடங்கிவிடுவோம். நடுவில் ஏதாவது இடுக்கண் வந்தால் பார்த்துக்கொள் ளலாம்' என்று கூறி ஒருகாரியத்தைத் தொடங்குதல் அறிவின்மையாகும். மேலும், அவ்விதமாக ஆரம்பித்துவிட்டால் ஆபத்து நேரிடும்.

ஒருவனுக்குப் பிணிவந்தால் அப்பிணியைப்பற்றி கவனியாது நெய்யினுற் பற்றிஎறிகிற தீபோல் பெருகவிட்டு, அதிகதிரவியம் செலவுசெய்வதுமல்லாது

*ஐங்கிலேசங்களாவன—அவித்தியா கிலேசம், அபிநவகிலேசம், அஸ்திகத கிலேசம், ராககிலேசம், துவேஷகிலேசம் ஆக ஐவகையாம். இவை முறையே ஏடணைகளால் தனுவேதானென்ற கொள்கையாற் சங்கடப்படுவது. சம்சார சாகரத்துட் டயங்குவது, விஷய சுகங்களாலெய்தும் விசாரம், பலவாசைகளா லமிழ்வது, பெறும்பொருளா லமைதியின்றி அல்லற்படுவது இக்கிலேசங்களாற் றுன்பமே மிகுக்குமென்பது. (சீதாராமாஞ்சநேயம்)

பலதுன்பங்களை யனுபவித்தலைக்காட்டிலும் 'நோய்க்கிடங்கொடேல்' என்னும் திருமொழியை மேற்கொண்டு அவன் அதைத் தடுத்தால் அவனுக்குச் சுகத்துக்குச் சுகம்; செலவுமில்லாதிருப்பான். அதிகக் கஷ்டப்படவும் வேண்டியதில்லை.

வஸ்திரம் கொஞ்சங்கிழிந்தவுடனே அதை நாம் தைக்காது அலக்ஷியமாயிருந்தால் அந்தக்கிழிசல் அதிகமாகக்கிழித்து நற்பிரயோசனத்தைக் கொடுக்கிறதில்லை. ஆயினும் அது கொஞ்சம் கிழிந்ததென வறிந்தமாத்திரத்தில் தைத்திருப்போமாகில் வெகு சுலபமாக விருந்திருக்கு மென்பதற்கு ஐயமுளதேயோ.

இம்மாதிரியாகவே கலாசாலையில் பரீக்ஷைக்குக் கல்விகற்கும் மாணவர் அரைகுறையாய்ப் படித்துவிட்டு 'நாம் பணங்கட்டிவிட்டுப் பரீக்ஷைக்குப் போகலாம் நேரமாலா போய்விடப்போகிறது' என்று சந்தேகத்திற்கு இடங்கொடுக்காமல் அவர் சரிவரப்படிப்பாரேயாகில் பரீக்ஷயில் தேரி சிறந்த பண்டிதனுவானென்பதற்குத் தினையளவேனும் சந்தேகமில்லை.

'கேடுவரும்பின்னே மதிகெட்டுவரும்முன்னே' என்றது இங்கு கவனிக்கத் தக்கது.

ஆகையால் ஒவ்வொருவரும் துன்பங்களை முதலிலேயே வரவொட்டாது தடுத்துவிட்டு தமது காரியத்தைச் செய்துமுடித்தல் சாலச்சிறந்ததாகும்.

---

## நந்தாய்மொழி.

நம்தாய்மொழி - என்னுஞ் சொல்லானது, என்னையோ வெனின்? கடவுளால் படைக்கப்பட்ட உலகில், இந்தியாவென்னுமிடத்தில், நாம் வாஸம் செய்கிறோமென்பது அனைவரு மறிந்தவிஷயம். இவ்விதம் இந்தியாவென்னுந் தாயிடம்பிறந்த குழந்தைகளாகிய நம்மவர்க்கு, இந்துக்கள் என்னும் பெயர் வந்தது. இவ்விதம் பெயர்வாய்ந்த நாம், இப்போது பலபாஷையை வழங்கி வருகிறோம். ஒரே தாயின்வயிற்றிற் பிறந்த நாம், ஒரேபாஷையை நவில வேண்டுமேயொழிய, பலபாஷையை நவின்றுவருவதும் என்னையோ ? இது விஷயம் யாவருடைய மனதிலும் நிகழத்தக்கதுவே. ஆயின் நந்தாயானவள் பெற்ற குழந்தைகளாகிய, நம்மவர்கள் ஒரேபாஷையை வழங்கிவருகிறோமே யொழிய பலபாஷையன்று, எனவுறுதியாய்ச் சொல்லலாம். அதாவது, ஒரே தாயானவள் எவ்வளவு குழந்தைகளைப்பெற்றாலும் விசாரித்தால், அந்தக் குழந்தைகள் ஆணும் பெண்ணுமாக விருக்குமேயொழிய வேறுவகையாயிராது என்பது திண்ணம். ஒருக்கால், ஆணும், பெண்ணுங் கலந்தரூபத்தோடு பிறப்பினும் உலகோரதனைக் கைக்கொள்ளமாட்டார்களென்பது உறுதியே. அதனைப்போலவே இந்தியாவென்னும் நந்தாய், ஆண், பெண், என்னு மிரண்டுபாஷைகளான அதாவது தமிழ், ஸமஸ்கிரதம், என்னும் இரண்டு பிரிவான குழந்தைகளை யீன்றனள்.

இவ்வாறு இந்தியாவென்னும், நம்தாயினின்று பிறந்த விரண்டு குழந்தைகளில், ஒன்று வடபாகமும் மற்றொன்று தென்பாகவும் பரவப்பெற்றது. இதில் வடபாகம் பரவப்பெற்ற குழந்தையின் பெயர் வடமொழி (ஸம்ஸ்கிரதம் என்

றும், தென்பாகம் பரவப்பெற்ற குழந்தையின் பெயர் தென்மொழி) (தமிழ்) என்றும் பெயர்வகுக்கப்பெற்றன வென்றுள்ளது யாவரும் சந்தேகமின்றி ஒப்பக் கூடியதுவே. இனி இந்த வடமொழியின் வரலாறும், தென்மொழியின் வரலாறும் முறையேவரும் மாலிகைகளில் விரிவாய்க் கூறுவாம். ஆயின் இப்போது நிகழும் தமிழ்பாஷையானது, ஆதியில் திராவிடபாஷையென ஒரே பெயரோடு வழங்கிவந்ததென்று ஆன்றோர் கூறுவர். அதாவது திராவிட பாஷையானது தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம் என்ற நான்குபாஷையும், ஒன்றுசேர்ந்த வோர்வித பாஷையென்று கூறுப. இது கால வேற்றுமையின் வேறுபாட்டால், பலகாலஞ்சென்றதின் பிறகு, முன்சொன்ன நான்கு பாஷையின் பெயரோடுகூடப் பிரிந்துவிட்டது.

ஆயின் இந்த நான்குபாஷையின் முதல்பாஷையின் பெயர் தமிழ். இந்த நான்குபாஷையின் மூலபாஷையின் பெயருந் தமிழே. இந்த நான்குபாஷையி னிலக்கண விலக்கியங்களும், மற்றும், முக்கியமாய்த் தமிழையே யொத்திருக்கின்றன வென்பது பார்த்தாலறியலாம்.

தமிழ்பாஷையைத் தவிர மற்ற மூன்றுபாஷைகளும் சிற்சிலவிடங்களில் நிகழ்வதேயன்றித் தமிழைப்போல் தென்பாகமுழுவதும் பரவப்பெறு மாற்றலுடையதன்று.

இன்னு மிதனைத்தவிரப் பற்பலபாஷைகள் பற்பலவிடங்களில் பரவினு மப்பாஷைகள் ஒவ்வோரிடங்களில், ஒவ்வொருவராலுந் தற்காலத்திலுண்டு பண்ணின பாஷையேயன்றி ஆதிபாஷையல்லவென்பது, யானெழுதாமலே யாருமறிந்த விஷயம்.

இதனால் யான் பற்பலபாஷையை நிந்திக்கத் 'தொடங்கினேனென்ற எண்ணம்வேண்டாம், ஒவ்வொருவருந் தான்பிறந்ததாயின் வரலாறு தெரியாதிருந்தால் பிறரால் நிந்தனைக்குவிடமுண்டாகும். அதைப்போல நந்தாயாகிய இந்தியாவின் மக்களாகிய, நம்மவரை நாமறியாதிருத்தல் தகுதியல்லவென்று வெழுதத்துணிந்தனன்.

இவ்விதம், இந்திய மாதாவின் குழந்தைகளில், தமிழ்க்குழந்தைகளாகிய நாம், நம் தாய்ப்பாஷையான தமிழைமறந்தும், வேறுபற்பலபாஷைகளைக்கற்றும் வருவது நன்மையைத்தருவதல்லவென்பது யான் சொல்லாமலே விளங்கும்.

இவ்வுலகில், தாயையுந் தந்தையுங் கடவுளினு மேன்மையாக வழிபட வேண்டுமென்றே நம் தாயாகிய ஒளவையாரும், நாயனாரும் கூறியுள்ளார். "அன்னையும் பிதாவு முன்னறிதெய்வம்" என்றும் "மகன் றந்தைக் காற்றுமுதவி யிவன்றந்தை, யென்னோற்றான் கொல்லென்னுஞ் சொல்" என்றும் கூறியுள்ளார். இதனை நாம் சற்றும் ஆலோசியாது, நம் தமிழ்பாஷையை மறந்துவிடுவது தீராப்பாவமேயாகும். நாலடியாரில் கூறியுள்ளவாக்கியத்தின்படி, உலகக்கன்றுகளாகிய நாம், நம்தாய்மொழியாகிய தமிழை, வலியவேயமையவேண்டிய திருப்ப, எதற்காக நம்தாய்மொழியாகியதமிழைநாடாதிருக்கிறோம்? இருத்தலாலடையும்

லாபமென்ன? ஒன்றுமேயில்லையாம். உலகில்பிரசித்திபெற்ற காவியமாகிய இராமாயணத்தில் தாயான கைகேசியின் மொழிக்காக இராமன் நடந்த வரலாறு நம்மவர்க்கு நல்லதுபோலவே தெரியவருமே. அவர் எவ்வளவு துன்பம் வந்தபோதும் தாயின்மொழியை மறக்கலாகாது என்ற உறுதியினால் முடிவில் சுகமே யடைந்தனரன்றி வேறில்லை.

ஆனதினால் தமிழ் குழந்தைகளாகிய நாம் நம் தாய்ப்பாஷையான தமிழைக் கை நழுவவிடாது, அரசபாஷையான ஆங்கிலேயத்தைக் கற்றபோதிலும் இதனைக் கட்டாயம் கைக்கொண்டு, உலகில் பாராட்டிவருவோமாகில் தாயை வழிபடும் பலன் நம்மவர்களுக்குக் கிடையாமல் போகாதென்பது திண்ணம். துரைத்தனத்தாரும் நமக்கு வேண்டிய உதவிபுரிவார்கள். தமிழின் வரலாற்றையும் அதன் மகிமையையும்பற்றி பிறகு வெளியிடுவோம்.

---

## போதுமென்றமனமே பொன்செய்யும் மருந்து

இவ்வுலகில் அவதரித்துள்ள சகல ஜீவராசிகளுள்ளும் இம்மானிடப்பிறவியே அதிக மேன்பாடுடையது. அம்மாந்தர்கள் ஒவ்வொருவரும் தம் தம் இலௌகீக நிலையில் திருப்தியடையாது மேன்மேலும் உன்னதஸ்தானத்தையே பெற சதாமுயற்சி யுடையவர்களா யிருக்கின்றார்க ளென்பதற்கோர் ஐயமில்லை. இதில் சிற்சிலரே தம் நாட்டத்தை ஈடேற்றவல்லவர்களா யிருக்கின்றார்கள் மற்றவர்களோ தம் அரும்பிரயாசமெல்லாம் பிரயோஜனமற்றதாய் விளங்க 'நாமொன்று நினைக்க, தெய்வம் ஒன்றுநினைத்ததே' என்றும் 'பொல்லாதகாலம் சொல்லாமல் வந்ததே" என்றும் ஆறாத்துயரில் மூழ்கின்றார்கள். பின்கூறியவர்களுள் மிகச் சிலரே 'மனக்கவலை பலக்குறைவு' என்னும் முதுமொழியை ஆதாரமாய்க்கொண்டு கிடைத்ததைக்கொண்டு திருப்தியடைய வேண்டும் என்னும் நீதியை உய்த்துணர்கின்றனர். மிஞ்சியவரோ 'தெய்வத்துணையற்றவனுக்கு செல்லுமிடமெல்லாம் அல்லல்' என்னும் பழமொழியுண்டே என்று ஏக்கமுற்றவர்களா யிருக்கிறார்கள். அந்தோ! பரிதாபம்! 'அகதிக்கு ஆகாயம்தான் துணை' யென்பதுபோல் சாக்ஷாத் பூரணதயாநிதிக்கே அவர்கள் படுந்துயரம் இனிது விளங்கும். இக்கவலையெல்லாம் அடியோடு ஒழித்து ஆன்றோர் மொழிந்தபடி 'கிடைத்ததைக்கொண்டு அகமகிழ், என்னும் சஞ்சீவிகுளிகையைத் தாங்கள் எப்பொழுதும் கையாடுவதே சாலச்சிறப்பாகும். இதற்கோர் திருஷ்டாந்தம் கூறுவோம்.'

முன்னோர்காலத்தில் விருத்தாப்பியரொருவர் தோட்டத்தில் வேலைசெய்து கொண்டிருக்கும் சமயம் ஒருபிரபு அத்தோட்டத்திற்குட்சென்று அவ்வயோதிகர் வெயிலில் உழைத்துக் கொண்டிருந்ததைக்கண்டு இக்கொடிய வெயிலில் அரும்பாடுபடுகிறானே என்று மனவருத்தப்பட்டு, அவரை அணுகி இக்கடுவெயிலைக் கொஞ்சமேனும் கவனியாது கால்கொப்பளிக்கவும் தலைநோகும்படியும் பாடுபடுகிறாயே இது உன்னுடைய தோட்டமா என்று வினவினார்.

**தோட்டக்காரன்:**—பிரபுவே! நான் வேலைக்காரன். எனக்கு மாதம் 8-ரூபாய்

சம்பளம். எஜமானனுக்கு கீழ்ப்படிந்து பெற்றுக்கொள்ளும் சம்பளத்துக்கு வஞ்சனையில்லாமல் உழைக்கவேண்டியது கடமைதானே?

**பிரபு:**—உம்முடைய குடும்பம் பெரிதோ சிறிதோ?

**தோட்டக்காரன்:**—என் குடும்பத்திலுள்ளவர்கள் தொகை 8. ஆண்மக்கள் 4. பெண்மக்கள் 4.

**பிரபு:**—பெரியவரே! அதிக விலைகிராக்கியான இக்காலத்தில் இச்சொற்ப ஊதியத்தைக்கொண்டு எப்படி உன் குடும்பத்தை காப்பாற்றுகிறீர்?

**தோட்டக்காரன்:**—பிரபுவே! கிடைப்பதைக்கொண்டு சந்தோஷப்படுவதே மேலானது. சொற்ப வரும்படியைக்கொண்டு சந்தோஷமடையாதவன் அதிகலாபம் கிடைப்பதானாலும் சந்தோஷமடையான் என்பது திண்ணம். நான் என் வரும்படியில் நான்கில் ஒருபங்கை முன்பட்ட கடனுக்கும், ஒரு பங்கை தருமத்திற்கும், ஒருபங்கை சேகரித்தும், ஒருபங்கை குடும்பத்திற்கும் உபயோகப்படுத்தி வருகிறேன்.

**பிரபு:**—வயோதிகரே! நீர் கூறும்விஷயம் ஒன்றும் புலப்படவில்லையே?

**தோட்டக்காரன்:**—ஐயா, என்னை இவ்வளவுகாலமாய் காப்பாற்றிவந்த என் விருத்தாப்பியமான பெற்றோரை ஆதரிப்பது என்கடமை. இவர்கள் சவரக்ஷணைக்கு ஏற்படும் செலவே நான் முன்பட்டகடன். என் சகோதரிகள் ஆதரவற்றவர்கள் அவர்களைக்காப்பதற்கு கொடுப்பதே தர்மச்செலவு. நானும் என் மனையாளும் விருத்தாப்பியமான காலத்தில் எங்களை ஆதரிக்க இப்பொழுது புத்திரர்கள் விஷயமாய் செலவிடும் தொகையே நான் சேர்க்கும் மூலதனம். இதுதான் விவரவிளக்கம்.

இவ்வாறு பெரியவர் புகன்றமொழி மனதிற்பதிந்தவுடன், பிரபு, ஹா! நமக்கு அளவிறந்த பூஸ்திதியிருந்தும் திருப்தியுறாது இன்னும் அதிகமாய் சேர்ப்பதிலேயே நாட்டமாய் கவலையுற்று திரிகிறோமே என்று மனம் நொந்தவராய் அவ்வயோதிகரை ஆலிங்கனம்செய்து அவர் தனக்குக் கற்பித்த நீதிக்காக 1000–வராகன் குருதக்ஷணையாகக்கொடுத்து தன் இல்லம் ஏகினார்.

---

## மோக்ஷ சாதனம்

### மானசபூஜை.

(264-பக்கத் தொடர்ச்சி)

மேற்கூறியபடி ஏககாலத்தில் அருவத்தியானத்தில் மனதை நிறுத்தக் கூடாதவர்களுக்கு உருவத்தியானம் அதாவது சகுணோபாசனை (சகுண + உபாசனை) கூறப்பட்டிருக்கிறது. அதாவது கடவுளை யொரு உருவமாய்க் கருதி தியானித்தலாம். கடவுளால் சிருஷ்டிக்கப்பட்ட எல்லா உருவங்களிலும் மானிடவுருவமே சிறந்ததாக மதிக்கப்பட்டிருக்கிறது. அதோடு மானைக்காட்டி மானைப் பிடிப்பதுபோல் ஆண்டவன் ஒவ்வோர் சமயங்களில் அடியார்களை யாட்கொள்ளும் வண்ணம் கருணையோடு மானிடவுருக்கொண்டு தோன்றிமறைதலாலும்

சகுண உபாசனைசெய்வோர் கடவுளை மானிடவுருவமாகவே பாவித்துப் பூசிக்கும் ஏற்பாடுண்டாயிற்று.

கடவுள் உருவில்லாதவராதலால் அவ்வாறு மானிடவடிவாய்த் தோன்ற மாட்டார் எனின், யாரார் எப்படி எப்படி பாவிக்கிறார்களோ அவரவர்களுக்கு அப்படி யப்படியே காட்சிகொடுக்கும் சர்வவல்லமை யுடையவரென்பது பொய்த் துப்போம். மேல்நாடுகளில் ஆதியில் எங்குமே விக்கிரக ஆராதனையை யனு சரித்துக்கொண்டிருந்தார்கள். பிற்காலத்தில் தோன்றிய மதஸ்தாபகர்கள் அதைக் கண்டித்து நீக்கிவிட்டார்கள். இதைக்காரணமாகக்கொண்டு சிலர் விக்ரகாராதனை யிருக்கும் மதம் அநாகரீகமான தென்று கூறுகிறார்கள். சிலர் ஹிந்துக்களை நோக்கி "உங்களுக்குப் பல தெய்வங்களிருக்கின்றன. உங்கள் கடவுளர்க்கு மனி தனுக்கிருப்பதுபோல் மனைவிகளும் மக்களுமிருக்கிறார்கள். அப்படிப்பட்டவர்க ளெல்லாம் தெய்வங்களாகா......" என்றுகூறுகின்றனர்.

இவர்கள் கூற்று உண்மையறியாமதியிலிகளின் வீண் கூற்றென்றே தள் ளத்தக்கதாகும். ஏனெனில்,

அவ்வப்போது அந்தந்த தேசங்களில் மகான்களாகிய மதாசாரியர்கள் தோன்றி ஆஸ்திகமதத்தை நிலைநிறுத்துகிறார்க ளென்பதுண்மையே. ஆனால் அவர்களின் போதனைகள் அந்தந்தவிடங்களுக்கும் காலங்களுக்கும் தக்கினவாறாக விருக்கின்றனவே யன்றி வேறில்லை. மேல்நாடுகளிலிருந்து நீக்கப்பட்ட விக்ர காராதனைக்கும் நமதுவிக்ரகாராதனைக்கும் அளவுகடந்த பேதம்இருக்கிறது. அவர் கள் அனுசரித்துவந்தது பதுமையாராதனை யென்றே கூறப்படவேண்டும். அக் காலத்தில் அவர்கள் அப்பதுமைகளையே உண்மைக் கடவுளாக வெண்ணி யாரா தித்துவந்தார்கள்.

ஆகையால் அக்காலங்களில் அந்தநாடுகளில் தோன்றியமதாசாரியர்கள் "இப் பதுமைகள் உங்கள் கரங்களால் செய்யப்பட்டவை. இவை கடவுளாகமாட்டா. எங்கும் நிறைந்தவரும் சர்வவல்லமையும் உடையவருமான கடவுள் ஒருவர் இருக்கிறார். அவர் ஒருவரே. அவருக்கு உருவமில்லை. அவருக்குச் சமான மான வஸ்து ஒன்றுமேயில்லை. ஆகையால் வேறொன்றை யவருக்குச் சமமாய் நினைப்பதாவது, அவருக்குப்பதிலாய் வேறொன்றைக் கடவுளென்று பூசிப்ப தாவது பெரியபாபம்" என்று போதிக்கவேண்டியது அவசியமாயிற்று.

நமதுவேதத்தில் கூறப்பட்ட விக்கிரகாராதனை யத்தகைய பதுமையாரா தனை யன்று. கடையிலிருக்கும் பதுமையை வாங்கிவந்து அதைக் கடவு ளென்று நாம் ஆராதிப்பதில்லை. சிற்பி ஒருவிக்ரகத்தை வார்த்ததே அதை ஆரா திப்பதுமில்லை. ஆகமவிதிப்படி அதற்குச் செய்யவேண்டிய கிரியைகள் யாவும் செய்துமுடிந்த பிறகு குறித்தஸ்தானத்தில் அஷ்டபந்தனம் என்ற மந்திரவல்ல மையால் அது ஸ்தாபிக்கப்படவேண்டும். பிறகே அது ஆராதனைக்குத் தகுதி யுடையதாகின்றது. மந்திரத்திற்குச் சக்தியுண்டு. சத்தத்திற்கு ஒருவித சக்தி யுண்டென்றும் மந்திரம் என்பது சத்தங்களின் மாறுதலே யாதலால் அதற்கும்

ஒருவித வல்லமையுண்டென்றும் இக்காலத்திய ஜடசாத்திரிகளுமே நிரூபித்திருக்கிறார்கள். பசுவிற்குப் பால் தேகமுழுதுமே யிருந்தாலும் முலைக்கண்ணினிடத்திருந்தே அது வெளிவருதல்போலவும், கட்டையில் தீமுழுதுமே அவ்வியக்தமாய் (வெளிப்படாது, மறைந்து) இருந்தபோதிலும் கட்டையோடு கட்டையைத் தேய்க்கும்போது தேய்ப்புவாயில் அந்த அக்னி வெளிவருவது போலும், கடவுள் எங்குமே நிறைந்திருந்தாலும் அவருடைய அருள்விலாசம் அவ்விக்கிரகத்தில் பிரகாசிக்கும்படி மந்திரத்தால் பிரார்த்தித்துக் கொள்ளப் படுகிறார்.

அவவித விக்ரகத்தை யாராதித்தபோதிலும் அதையே முடிவான கடவுளாக வாவது அதைவிட வேறு கடவுளில்லை யென்றாவது நினைத்து ஆராதிப்பதில்லை. கடவுள் உருவமுமல்ல, அருவமுமல்ல, ரூபாரூபமுமல்ல, ஆணுமல்ல, பெண்ணுமல்ல, அலியுமல்ல, ஒரு நிபந்தனைக்காவது அளவுக்காவது அவர்கட்டுப் பட்டவரல்ல, ஒன்றிலிருந்து உண்டானவரல்ல, சுயம்புவாய், என்றுமாய் எங்குமாய் சர்வவல்லமை யுடையவராய் விளங்கி நிற்பவர் என்று தெளிவாய்வேதத்தில் கூறப்பட்டிருப்பதுபோல் வேறெந்த நூலிலும் கூறப்பட்டிருக்கவில்லை. ருக், எஜுர், சாமம், அதர்வணம் என்று நான்கு பிரிவுகளிருப்பினும் வேதம் ஒன்றே. வேறுவேதங்களில்லையோவெனின் வேறெதற்கும் அந்தப்பெயர்இல்லை. அதுதக்க காரணத்தோடு அளிக்கப்பட்ட பெயர். எவ்வாறெனின் வித்-என்றால் ஞானம். ஞானத்தைப்போதிப்பது வேதம். ஞானத்தைப் போதிக்காதது வேதம் என்ற நாமத்துக்கு அருகமானதல்ல. இறவலாய் யார் வேண்டுமாயினும் இப்பெயரைக் கூறிக்கொள்ளலாமேயன்றி வேறில்லை. நாம் வணங்கும் விக்ரகத்தை மேற்கூறிய இலட்சணங்கள் பொருந்திய கடவுளாய்ப் பாவித்து வணங்குகிறோமேயன்றி ஒருமுழத்திலடங்கும் விக்ரகமாய்க்கருதியல்ல. ஆகையால் நாம்செய்யும் வணக்கமும் தோத்திரமும் அவரையேசேர்கின்றன.

அத்தகைய வணக்கமும் மந்தமதியினர்க் கென்றே ஏற்படுத்தப்பட்டுள்ளது. அதைப்போலவே மந்தமதியுடையோர் உணர்ந்துகொண்டு காலக்கிரமத்தில் படிப் படியாய் மேல் நிலைக்கு வரும்பொருட்டே கடவுளின் பலவிதச் சக்திகளையும் உருவகப்படுத்தி உட்கருத்தாக அந்தரார்த்தங்களை யமைத்து கடவுளுக்கு மனைவியரென்றும் புத்திரரென்றும், சடையென்றும், புலியதளுடையென்றும், அரவாபரணமென்றும், மார்பில் இலக்குமியென்றும், கையில் சங்குசக்கரமென்றும், நாகசயனமென்றும் இன்னும் பலவிதங்களாய்க் கூறப்பட்டிருக்கிறது.

இவையாவும் ஆங்கிலத்தில் Metaphor என்று கூறும் உருவக அலங்காரமேயன்றி வேறில்லை. இவ்வாறு உருவகப்படுத்தி கூறப்படும் புராணங்களிலேயே கடவுள் ஏகமான ஒருவரேயென்றும் சமானமற்றவரென்றும், உருவமாவது நாமமாவது அற்றவரென்றும் இடையிடையே கூறபபட்டிருக்கிறது.

ஒருசமயம் அப்படியும் மதிமயங்கி இக்கீழ்ப்படியிலேயே நின்றுவிடப் போகிறார்களென்று மேல்நிலையை நோக்க இவையாவும் பயனற்றவையென்ன கூறப்பட்டிருக்கிறது. அடையவேண்டியது மேல்மாடியாயிருக்க ஒருவன்

ஏணிப்படியிலேயே நின்றுகொண்டிருப்பானாயின் அவனைநோக்கி, "அடே மேல் தளத்தில் சென்றாலல்லவோ கடலைக்காண்பாய் இந்த ஏணிப்படியில் நிற்பதால் என்ன பயன்" என்று கூறுவோமல்லவா. அதைப்போலவே மேல்நிலைக்குச் செல்லாது படிகள்போன்ற சரியைகிரியை முதலிய நிலையிலேயே யிருப்போர் களை நோக்கி அவற்றில் பயனில்லையென்று ஆன்றோரும் கூறியிருக்கின்றனர். இக்கருத்துகொண்டே மெய்ஞ்ஞானச் செல்வராகிய நமது பட்டினத்தடிகள்,

"சொல்லினும், சொல்லின் முடிவினும், வேதச் சுருதியினும், அல்லினும் மாசற்றவாகாயந்தன்னினும் ஆய்ந்துவிட்டோர் உளத்திலும் * * ஈசன் இருப்பதல்லால்—கல்லினும் செம்பிலுமோ இருப்பார் எங்கண்ணுதலே" என்று கூறினர்.

அவர் அப்படிக்கூறியதால் "அவரே விக்ரகாராதனையைக் கண்டித்து அது பாபமென்று கூறியிருக்கிறார்" என்று சிற்சிலர் கருதுகின்றார்கள். இது அறி வின்மையேயாகும். ஏனெனில் அப்படியவர் கூறியிருப்பதாயின் ஏணிமேல் நிற்பவனை நோக்கி "அடியிலேயே நிற்பதில் காரியசித்திகிடைக்காது, மேலே றித்தளத்திற்செல் " என்று கூறுவதற்குப்பதிலாக "ஏணிப்படிகளில் ஏறினால் கடல் தெரியாது இறங்கிவிடு" என்று கூறினது போலாகும். அவனும் அறிவிலி யாயிருந்து "அப்படியானால் இதில்ஏறியது வியர்த்தம்"என்று கீழிறங்கிவிடுவானா யின் இவனுக்குப் புத்திகூறியவன் அரைமூடனும் இவன் முழுமூடனுமாக வேண்டும். இதுமட்டுமல்ல பட்டிணத்தடிகளே முதலில் சரியை கிரியைகளை யனுஷ்டித்தே ஞானியாகி துறவாசிரமத்தை யடைந்தாரென்பதையும், அந்தக் கவியைப்பாடும்போதும் அவர் ஆலயங்கள்தோறும் சென்று அங்குள்ள மூர்த் தங்களைச் சேவித்துக்கொண்டேதான் உலகோர்க்காக அவ்வித உபதேசங்களை மொழிந்தருளினர் என்பதையும் உணர்ந்திருந்தால் அவர் விக்ரகாராதனையைக் கண்டித்துக் கூறினர் என்று தவறாய்க்கூறமாட்டார்கள்.

சரியைகிரியை முதலியவை மோக்ஷம்பெறற்கு அவசியமாய் வேண்டிய ஞானத்தை யடைவதற்குப் படிகள்போன்றதேயென்றும், படிப்படியாய் ஏறியே முடிவான பொருளை யடையவேண்டுமென்பதையும் உணர்த்தவே தாயுமான சுவாமிகளும்,

"விரும்புஞ் சரியைமுதன் மெய்ஞ்ஞான மொருநான்கு
மரும்புமலர் காய்கனிபோ லன்றோ பராபரமே" என்றருளினர்

அதாவது சரியை, கிரியை, யோகம், ஞானம் இந்நான்கும் அரும்பு, மலர், காய், கனிபோல விருக்கின்றனவென்பதாம்.

ஒருவன் புசிக்கத்தக்கதுகனியே. அதுபோல் நாம் அடையவேண்டியது ஞானமே. முதல் அரும்புதோன்றி, அதுமலர்ந்து மலராகி, பிறகு அதில் காய் தோன்றி, அது பழுத்து கனியானபின் புசிக்கத்தக்கதாகிறது. அதேபோல் சரியை யாதியையும் ஒவ்வொன்றாயனுசரித்து முடிவில் ஞானத்தை யடைகி றோம்.

இவ்வாற்ருல் சுருதியின்படி விக்ரகாராதனே மோட்சசாதனங்களில் ஒன்றென்றும் குற்றமற்றதென்றும், பெரியோர் அச்சரியையாதிபடிகளில் ஏறி ஞானமாகிய உயர்ந்தமேடையை யடைந்தார்களென்றும் அறிகிருேம். சுருதியும் அனுபவமும் இருக்க நமது யுக்திக்கும் ஒத்திருக்கிறதாவென்று பார்ப்போம். ஒருவன் தன்மனைவி மக்களைவிட்டுத் தூரதேசம்போய்விட்டானென்று வைத்துக்கொள்வோம். அவன் பிரிவைச் சகியாதபுத்திரன் தன் தந்தையின் உருவப்படத்தை வைத்து தினம் அதற்குப் பூசனைசெய்து வருகிருன். தந்தை யதை யுணர்ந்தபோது தன்புதல்வன் செய்கைக்காக சந்தோஷமடைவாஞ கோபம்கொள்வாஞ எனில், கோபம்கொள்ளான், சந்தோடமே யடைவான் என்று மூடனும் சந்தேகமின்றி விடையளிப்பான்.

நமது சக்ரவர்த்தி நாகரீகமான விலையுயர்ந்த உடைகளையணிந்துமிக்க அழகுபெற அலங்கரிக்கப்பட்ட உன்னதமாளிகையில் வாசம் செய்து வருகிருர். அவர் நெடுந்தூரத்தி லிருப்பதால் அவரிடத்தில் அன்புகொண்ட நாம் அவரைப்போல் வெண்கலத்தால் ஒரு உருவம்செய்து பகிரங்கஸ்தலத்தில் வைத்து, சக்கிரவர்த்தியின் பிறந்தநாள், வருடப்பிறப்பு, பட்டந்தரித்தநாள் முதலிய விசேஷநாட்களில் அந்தச் சிலைக்கு வந்தனை வழிபாடு முதலியன செய்கின்ருேம்.

அதற்காகச் சக்ரவர்த்தி, "ஆ! நமது பிரஜைகள் நம்மேல் எவ்வளவோ அன்புகொண்டு நம்மைப்போல் ஒருசிலையைவைத்து இத்தகைய உபசாரங்களைச் செய்கிருர்கள்" என்று சந்தோஷமடைகிருரா, அல்லது, "நான் உயர்ந்தபட்டாடையணிந்து விசித்திரமானமாளிகையில்வசிக்க, என்னை உலோகத்தால் ஒரு உருவமாய்ச்செய்து வெட்டவெளியில்வைத்து, வெயிலும் மழையும் என்மேற்ருக்கவும், துஷ்டக் காகம், கழுகு, பருந்து முதலியபட்சிகள் என்தலைமேல் எச்சமிடவும் செய்திருக்கிறீர்களே" என்று கோபமடைகிருரா? அப்படிக் கோபமடைவாரேல் அவருக்குப் பைத்தியம்தொடர்ந்துவிட்டதென்று துக்கிப்போமேயன்றி வேறில்லை.

சக்ரவர்த்தியையேனும் கொஞ்சம் பணம் செலவுசெய்தால் போய்க்காணலாகும். கடவுளோ யாராலும் காணக்கூடாதவர். அத்தகைய அருமைவாய்ந்தவரிடம் நாம்கொண்டிருக்கும் அன்பைக்காட்டும்பொருட்டு அவர் சிருஷ்டியில் சிறந்த உருவமான மனிதஉருவமாய் அவரைப்பாவித்து அதற்கு வந்தனை வழிபாடுசெய்தால் அதற்காக அவர் கோபிப்பார்என்று நினைப்பது சற்றும் பொருந்தாதயோசனையேயாகும். நோக்கத்தையறிந்து செய்கையை மதிக்கும்குணம் மனிதனுக்கேயிருக்கையில் கடவுள் அதற்காகக் கோபிப்பாரெனல் கடவுளுக்கு இருக்கும்புத்தி மனிதன்புத்தியிலும் தாழ்ந்ததென்று கூறுவதாகவேமுடியும்.

இவ்வாற்ருல் கடவுளை யுருவமாய்ப்பாவித்து உபாசனைசெய்தல் சுருதி யுக்தி அனுபவங்களுக்கு ஒத்ததேயென்று தெளிவாய் விளங்குகிறது.

(இன்னும்வரும்)

# உபாத்தியாயரும், மாணுக்கரும்

மாணுக்கர்களுக்குத் தம்மிடத்தில் அன்பும் அச்சமும் இரண்டும் உண்டாகும் வண்ணமாகவே உபாத்தியாயர் நடந்துகொள்ளவேண்டும். ஆனல் இவற்றில் எந்த உணர்ச்சியை முதலில் உண்டாக்கவேண்டு மென்பது ஒரு விஷயம்.

அன்பால் நடப்பது பயத்தால் நடவாது. அன்பென்பது கடவுளேயே வசியம் செய்யக்கூடிய ஒரு மந்திரம் போன்றது. அன்பென்னும் வலையில் ஈஸ்வரனே சிக்கிக்கொள்கிருன். "பக்தி வலையிற் படுவோன் காண்க" என்று ஆன்ருேர் கூறியுளர். ஒருவன் நம்மிடம் அன்பு வைத்திருப்பதாய் நமது மனதிற் பட்டுவிட்டால் பிறகு அவர்கள் நம்மை எதற்கேனும் கடிந்து கூறினும் "இவர்கள் நமது நன்மைக்கே இப்படிக் கூறுகிருர்கள்" என்று நம்மனதிற் ருேன்றுகிறது. ஒருவன் தன்னிடத்தன்புடைய ஒருவர் எதைக்கூறினும் அது தன் மனதிற்கு ஒவ்வாததாயிருப்பினும் அதைச் செய்தே தீருகிருன். ஏனெனில் தம்மிடம் அன்புள்ள ஒருவர் மனதிற்கு அதிருப்தி யுண்டாகும் வண்ணம் நடந்துகொள்ள எவர்க்கும் மனம் இடந்தராது.

நாம் நமது மக்களிடம் ஆரம்பத்தில் (சிறு பருவத்தில்) வெறும் அன்பையே காட்டுகிருேம். ஆதலால் பாலப்பருவத்தில் நாம் அவர்கள் குற்றத்திற்காக அவர்களேத் தண்டித்தாலும் மறுநிமிடமே அவர்கள் நம்மிடம் அன்பையே காட்டுகிருர்களன்றி நம்மை வெறுப்பதில்லே. அன்பு அவ்வாறு செய்கிறது. நமக்கும் நம்மக்களுக்குமுள்ள பரஸ்பர அன்பிற்கு இயற்கை யாதாரம் இருக்கிறது. ஆகவே நமக்கு அவர்கள்பாலுள்ள அன்பை வெளிப்படையாய்க் காட்டிவிட்டால் அவர்களுக்குண்டாகக் கூடிய அச்சத்தை அது அடியோடு கெடுத்துவிடும். ஆகையால் மக்களிடத்துள்ள அன்பை யவர்கள்முன் காட்டிக்கொள்ளலாகாதென்று ஆன்ருே ரருளியுள்ளார்.

அன்னியரிடமோ நமதன்பை வாக்காலும், செய்கையாலும் வெளியிட்டால்தான் அவர்கள் நமது அன்பிற் கட்டுப்படுவார்கள். அதிலும் சிறுவர்கள் சுலபமாய்க் கட்டுப்படுவார்கள்.

ஒரு பையன் வகுப்பில் நடக்கும்போது கீழேயிருக்கும் எழுது பலகையில் கால் இடறிக் கீழே விழுந்து விடுகிருனென்று வைத்துக் கொள்வோம். அதைக் கண்ட உபாத்தியாயர் மனம் பதைத்து எழுந்தோடி அச்சிறுவனைத் தூக்கி நிறுத்தி தேகத்தைத் துடைத்துத் தடவி, தேகத்தில் எங்காவது காயம்பட்டதா வென்று வினவியபின் "என்னடா முட்டாளா யிருக்கிருய். கீழே யிருப்பதைப் பார்த்தல்லவோ நடக்கவேண்டும். எங்காவது பாதையில் செல்லும்போது இப்படி மேலே பார்த்தபடி நடந்து விழுந்தால் பின்னல் வரும் வண்டி உன்மேலேறி மரணமல்லவோ அடைவாய். இனி எப்போதும் பாதையில் முன் என்னவிருக்கிறதென்பதைப் பார்த்து நட" என்று கூறினல் உபாத்தியாயரின் அன்பை அவன் உணர்வதோடு அவர் கூறும் புத்திமதியையும் நன்ருய் மனதில் கிரகித்துக் கொள்வான்.

அதைவிட்டு "அவன் விழுந்ததே, சமாளித் தெழுந்திருக்குமுன் பிரம்பி னுல் இரண்டடி சுடச்சுடக் "கொடுத்து, எழுந்திரு, மட்டிப்பயலே, கீழே என்ன விருக்கிறதென்று கண் தெரியவில்லையா உனக்கு" என்ருல் அப்பையனுக்கு பயம் ஒன்றுமட்டுமே உண்டாகுமன்றி அன்புண்டாகாது.

சில உபாத்திமார் முன்னே பிள்ளைகள் நம்மைக் கண்டால் கிடுகிடென்று நடுங்கும்படி செய்யவேண்டியதே சரியான மார்க்கம் என்று கருதி நடக்கிருர்கள். அந்தோ! இதுமுற்றும்தவருன அபிப்பிராயமே யன்றிவேறில்லை. முதலில் பிள்ளைகளுக்கு பயம் என்பதைக் காட்டலேயாகாது. அன்பு ஒன்றையேகாட்ட வேண்டும். பிறகு கொஞ்சம் கொஞ்சமாய் உபாத்தியாயர் கட்டளைப்படி நாம் நடந்துகொள்ளாவிடின் அவருக்கு நம்மேல் அதிருப்தி யுண்டாகும் என்பதை யுணரும்படி செய்யவேண்டும். உபாத்தியாயருடைய அன்பைப் போக்கடித் துக்கொள்ள ஒருபோதும் மாணவர்களுக்கு மனம் வராது. அந்த அன்பிற்குக் கட்டுப்பட்டே சொற்படி நடப்பார்கள். ஆகையால் உபாத்தியாயர் நம்மேல் அன்புள்ளவர் என்று முன்னே அவர்கள் மனதிற் படச்செய்யவேண்டும். அதற் கெல்லாம் வழிப்படாத மாணுக்கர்களுக்குக் கண்டனை தண்டனை அளவாய் உப யோகிக்கவேண்டும். சாமம், பேதம், தானம், தண்டம் என்றபடி தண்டனை கடைசியானது. அதை விட்டு ஆரம்பத்திலேயே பிரம்பிற்குப் பயந்து நடக்கும் படி செய்து கொள்வதால் பிள்ளைகள் ஒருபோதும் நல்ல பலனை யடையமாட் டார்கள். அதற்கு மாருய் உபாத்தியாயரிடமும், கல்வியிலும் வெறுப்படைந்து கொஞ்சகாலத்திற்குள் பிரம்பையே இலட்சியம்செய்யாத நிலைமைக்கு வந்துவிடு வார்கள்.

---

## சிறுவர்கள் பக்கம்.

### மைந்தர் கடமை

பிள்ளைகள் எப்போதும் தங்கள் பெற்ரேருக்குக் கடமைப்பட்டவர்களா யிருக்கிருர்கள். நமக்கு இவர்களையன்றி உலகில் விசேஷமுடையோர் பிறி தொருவருமில்லை யெனலாம்.

"தந்தைதாய்ப் பேண்" "அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்" "மாதாவை யொருநாளும் மறக்கவேண்டாம்" என்றின்னே ரன்னவாக்கியங்களை நாம் பன்முறையுங்கேட்டு மனனம்பண்ணி யிருக்கிரேமேயன்றி அவற்றின் பொருளை உணர்ந்திலம். முதலாவதாக நமது தகப்பனைக் கவனிப்போம். அவர் நமதுகல்விவிஷயத்திலும், உடை உண்டிமுதலியன வீந்து நம்மைப்போஷிக்கும் விஷயத்திலும் பட்டதுயர் கொஞ்சமாகா. தாயானவள் நம்மைப் பெறவேண்டி யனுபவித்த கஷ்ட நஷ்டங்கள் எண்ணுளடங்குமா? அவள் குடித்த மருந்தெவ் வளவு? காத்த பத்தியமெவ்வளவு? ஒறுத்த உணவு எம்மட்டு? தன்குழவிக்கு எங்கே வருத்தம்வந்துவிடுமோ, என்ன இக்கட்டுவந்துவிடியுமோ என்றேங்கிய ஏக்கமும், இராப்பகலாய் அடுத்தடுத்து நித்திரையின்றி பட்டதுயருங் கொஞ்சமா? நமது தாயை எப்போதாவது சுத்த உடையுடுக்க விட்டிருப்போமா? அவள்

கையால் அள்ளுபட்ட நமது மலசலத்தை நிறைக்க எத்தனை பாதாளப் படுகுழிகள்தேவை. கண்ணை இமைகாப்பதுபோலும், பறவை குஞ்சுகளைச்சிறகாலணைத்துக் காப்பதுபோலுங் காத்தாளல்லவா ?

" ஈன்றவர் நம்மாலுற்ற வெண்ணருமிடர்கட் கான்ற
மூன்றுலகமுமொப்பாமோ " என்றும்,

" மண்ணினிலன்னைதந்தைமறவறஞ்
செயினு நோன்பு
பண்ணினு முடல்வருந்தப் பணி
புரியினு மருந்தொன்
றுண்ணினுங் களிக்கினுந் துன்புற் றய
ரினுமனத் தொன்
றெண்ணினுந் தம்பொருட்டன்றிச்
சுதர் பொருட்டா லன்றே "

என்றும், பெரியோர்கூறுகின்றனராகையால், நம்பெற்றோர் நம்மை வளர்த்து மனிதராக்கப் பட்டபாடு இம்மட்டென்றுசொல்லவுங்கூடுமோ ?

நாம் இத்தகைய பெற்றோர்விஷயத்தில், (1) கீழ்ப்படிதல் (2) போற்றல் (3) பாதுகாத்தல் ஆகிய மூன்று காரியங்களையுந் தவறுமற் கைக்கொள்ளல் வேண்டும். இவையே மைந்தர் கடமைகளாம்.

முதற்கூறிய கீழ்ப்படிதலின் பயனை விளக்குமோர் சிறுகதை கூறுவங் கேண்மின்.

புகைரதமொன்றிற் றிசைகாட்டியாயுள்ள வொருவன், வழக்கப்பிரகாரம் தன்தொழிலின்படி, புகை யிரதம் சமீபத்தில் வரும்போது, ஏழுபிராயமுள்ள அவன்மகன் தண்டவாளங்கட் கிடையில் நின்று விளையாடிக்கொண்டிருக்கக்கண்டான். இரதத்தை நிறுத்தவோ சாத்தியப்படவில்லை. அதுவும் பிள்ளையாண்டானைக்கிட்டிவிட்டது. தகப்பன் பட்டதுயர் கொஞ்சமல்ல. இன்னுமோரிமைப் போதில் தன்மைந்தனின் பிரேதத்துண்டுகளைக் காணவேண்டுமேயென்றேங்கினுன். அவ்வேளை அவன் மகனைவிளித்து, "மகனே படு சீக்கிரம்" என்றான். அவன் உடனே பிதா சொற்படி தண்டவாளங்களுக் கிடையிற்படுத்துக்கொண்டான். வண்டி பையனுக்குமேலால் முழங்கிக்கொண்டுபோயிற்று. இவையெல்லாமொருநிமிஷத்துக்குள் நடந்தேறின. வண்டிதரிக்கவேண்டியஇடத்தில் நின்றவுடன் பிதாவானவன் மகனைநோக்கி யோடிவந்தான். ஆனுற் பையன் யாதொரு கெடுதியுமின்றித் தந்தை உத்தரவைக் நோக்கிப்படுத்தபடியேகிடந்தான். தகப்பனைக்கண்டு, " அப்பா இனி எழும்பலாமா ? " என்று கேட்டான். தன்னையேன் படுக்கச்சொன்னுரென்று அவன் இன்னும் தெரிந்துகொள்ளவில்லை. தகப்பன் அவனை வாரியெடுத்து உச்சிமோந்துகொண்டாடினுன். இப்பையனின் கீழ்ப்படிவு மாணத்தினின்று மிரட்சித்தது. கட்டளையிட்டபின் " ஏன் " " என்னத்துக்கு " என்றிப்படிக் கால்கரணஞ்செய்திருந்தால் மரணமே சம்பவித்திருக்குமென்பதிற் றடையில்லை. ஆகையால், பிள்ளைகள் பெற்றாரின் கட்

டளைக்கு உடனே கீழ்ப்படியப் பழகல்வேண்டும். நம்மைக் கெடுக்கு மெண்ணத்துடன் வீண்கட்டளைகளைப்பெற்றோர் சுமத்துவார்களென நினையற்க.

இனிப்பெற்றோருக்கு வணக்கமுள்ளவர்களாகவு மிருத்தல் வேண்டும். நம் முன்னோர், பெருநாள் முதலிய விசேஷ தினங்களில், அதிகாலையி லெழுந்து தம் பெற்றோரிடஞ் சென்று, தீர்க்க தண்டஞ்செய்து வணங்கி அவர்களா லாசீர்வாதமும் பெற்றுக்கொள்வர். சமுசாரிகளான பின்பு மப்படியே செய்வர். தற்காலமிதை அநாகரீகமென் றெண்ணி விட்டுவிட்டனர் போலும். அவர்களைப் போற்றல் மிகவுமவசியமானது. அவர்களிடம் ஆசீர்வாதம் பெற்றால்அது நஞ்சீவியத்துக் குதவியான சஞ்சீவியாகும். இதற்குப் பதிலாகச் சிலர் தாய் தந்தையரைக் கோல்கொண்டு மாட்டியும், திட்டியும் மனமெரியப் பண்ணுகிறார்கள். இவர்கள் கதி எவ்வாறென் றெண்ணுகிறீர்கள்? அவர்கள் மனம் நொந்த மாதிரியே, இவர்கள் ஜீவியமும் நொந்துபோம். இவர்கட் கோர்போதும் மீட்சியில்லை. பெற்றோரிடுஞ் சாபம் வாழ்க்கையைக் கெடுக்கும் விடமாகும். அந்தோ! இதற்கோ இவர்களை இவ்வளவு பாடுபட்டு வளர்த்தார்கள். இவர்கள் மக்களல்ல, ஒன்றுக்கு முதவாத வெறுங்கற்களே யாவர்.

பாரத மக்களி லொருவராய வீடுமர், தன் தந்தையின் பொருட்டு, உலகிலனுபவிக்கவேண்டிய அநேக இன்பங்களைத் துறந்து, அவரைக் களிக்கும்படி செய்து, பின் வருமாறு வாழ்த்தப்பெற்றார்.

“ தந்தையர்க் குதவு முதவியிற் சதமடங்
குதவினை யுனக்கு
மைந்தருக் குதவு முதவியிற் சிறிது
மாதவஞ்செய் திலேனுதவச்
சிந்தையிற் றுறக்கம் வேண்டாமென் றெண்ணிச்
செல்லுது மன்னுயிர்மேன்
முந்துறக் காலன்வரப் பெறுனென்றே
முடிவிலா வொருவரமீந்தான்.”

இம் மைந்தனிற் தந்தைக்குள ஆனந்தத்தைக் கண்டீர்களா? அன்றியும் ஈசாக் கென்பவர் தன் அந்தியகாலத்தில் யாக்கோபு, ஏசா என்னு மிருபுதல்வரில் ஏசாவை வாழ்த்தும்படி யழைக்க, அவ்வாலிபரில் ஒருவனாகிய யாக்கோபு எவ்வளவோ பாடுபட்டு ஏசாவை வஞ்சித்துத் தானே அந்த ஆசீர்வாதத்தைப் பெற்றானெனக்கூறப்பட்டிருக்கிறது. இவற்றால் பெற்றோரின் ஆசீர்வாத மெத்துணை இன்பகரமானதென் றறியலாம். தம் பெற்றோருக்கே துஷ்டத்தனமாய் நடப்போர், பிறரிட மெவ்வாறொழுகுவா ரென்பதைப்பற்றி சாஸ்திரம் பார்க்கத் தேவையில்லை.

அன்னை தந்தையர் ஆயுள் குன்றி நரைதிரை மேலிட்டுப் பாயும் படுக்கையுமாய் வருந்துங்கால மக்களுதவி யவசியமல்லவா? தவறின் நம்மைப் பெற்றதாலாய பயனென்.

“ சின்னவோர் பொருடந்தோரைச் சீவனுள்ளளவுமுள்ளத்
துன்னவேவேண்டுமென்ன வுரைத்தனர்பெரியோர்தேகர்

தன்னையாருரிரைச்சீரார் தரணியின்வாழ்வைத்தந்த
வன்னைதந்தையர்க்குச்செய்யு மருங்கைம்மாறுளதோவம்மா "

எனப் பெரியோர் கூறியிருக்கிறார்கள். "உள்ளங்கையில் உப்பிட்டவரை உயிருள்ளளவும் நினை" என்று பழமொழியுமிருக்க, நம் பெற்றாருக்குச் செய்யுமுதவி எம்மட்டென்பதைக் கூறவும் வேண்டுமோ? சிலர் மாதா வயிறெரிய மகேசுர பூசை செய்வதுபோல, அன்னையர் ஆகாரமின்றி வருந்த மனைவி மக்களுடன் கூடிப் பிரபுடீகமாய் நடக்கத் தலைப்படுகின்றனர்.

" மனையவள்வீயின்வேறோர் மனைவியைக்கொளலாம் பெற்ற
தனையராதியரிறப்பிற் றனித்தனிப்பெறலாம் பின்னும்
புனைபொருணீங்கின்மற்றோர் பொருளையும்பெறலாமத்த
னன்னையிறந்திடின்வேறத்த னன்னைவருவாரோநெஞ்சே "

என்றபடி, மாதாவிலும் மனைவி எம்மாத்திரம்? தந்தையிலும் மைந்தன் எம்மாத்திரம்? இக்காலந் தக்கபடி பெற்றாரைக் கவனிப்போர் அரிதினு மரிதாயிற்று. பாமரருட் சிலர் தம் பெற்றாரை நாய் பேய் போல் நடத்துகின்றனர். அச்சோ! இஃதெத்துணைப் பரிதாபம்.

எட்னு என்ற எரிமலை கக்கியபோது, அரும் பொருட்களையு மற்றெதையுங் கவனியாது, தள்ளாப் பருவத் தந்தையரைத் தோள்மேற் சுமந்தோடிக் காத்த புத்திரசிகாமணியின் சரிதை இவ்விடங் கவனிக்கத்தக்கது.

ஆகையாற் பிள்ளைகளே! வளர்ந்தவர்களே!! உங்கள் தாய் தந்தையர் ஆயுள்கால மட்டும் அவர்களைக் கைவிடாமற் பணிந்து, அவர்கள் காலாலிட்டதைத் தலையாற் சுமந்து, வருத்தம் வாதை வந்தவிடத்துப் பட்சத்துடன் பராமரித்துச் சமாதானத்தோடு காப்பாற்றுவீர்களாக. இத்தகையோர்க்குத் தேவாசீர்வாதமும், வெகு ஜனவாழ்த்தும், புகழுமுண்டாம்.

" மகன்றந்தைக் காற்றுமுதவி இவன்தந்தை
என் னோற்றான் கொல் " என்னுஞ் சொல்.

---

## சில பழமொழிகள்

1. சந்திரன், எவ்வளவு காந்தியாய் பிர்காசிக்கிறதோ அவ்வளவு அதிகமாய் நாய் குலைக்கும்—உயர்பதவிக்கு வருகிறவர்களைக்கண்டு அவர்கள் சத்துருக்கள் பொறாமையால் அவதூறு மொழிகிறார்கள்.

2. சிறுபானை சீக்கிரத்தில் சூடாகும்—அற்ப அறிவுடையோர்க்கு கோபம் உடனே யுண்டாகும்.

3. பாதத்தில் ஒன்றுமில்லாதார், முட்செடியை மிதிக்கலாகாது—கையில் பொருளில்லாதவன் கனமான காரியங்களில் தலையிடலாகாது.

4. சரியாய்ப்போகும் குதிரையை குதிமுள்ளால்குத்தாதே—மனப்பூர்வமாய் வேலைசெய்கிறவனைக் கசக்கலாகாது.

5. ஒவ்வொரு அவரைக்கும், அதனதன் கறுப்புண்டு—எல்லாரிடத்திலும் குறையுண்டு.

6. தூரமாய் நிற்கிற பசுமாடுகளுக்கு, கொம்புநீளம்—அருமையாய் வருவோருக்கு, அதிகமரியாதை.

7. அன்பில்லாதவிடத்தில், குற்றங்களதிகம்—வேண்டாதமனைவி, கால் பட்டாலும் குற்றம் கைபட்டாலும் குற்றம்.

8. மச்சமும், அதிதிகளும், மூன்றுநாளில் துர்மணமாவார்கள்—விருந்தும் மருந்தும் மூன்றுநாள்தானே.

9. அதிகம் பெற்றுக்கொள்ளப் பார்க்கிறவன் கைக்கு, ஒன்றுமே கிட்டாது—காணியாசை கோணிகேடு.

10. வெறும் பை நேராய் நிற்பது கஷ்டமே—எளியார் யதார்த்தமாய் நடப்பது கூடாமை.

11. சிறுகமண்டலங்களுக்கும், நீண்டகாதுகளுண்டு—சிறு பிள்ளைகளுக்கு முன் உன் இரகசியத்தைச் சொல்லாதே.

---

## ஸ்திரீகள் பக்கம்.

### ஸ்திரீகளின் முக்கிய தர்மம்.

இப்பூவுலகின் கண் பெண்களாய்ப் பிறந்தவர்களுக்குப் பூஷணமாகிய நாணம், மடம், அச்சம், பயிர்ப்பு என்னும் நால்வகை குணங்களுள் நாணம் என்பது வெட்கம்; மடமென்பது சகலமும் தெரிந்தும் தெரியாதுபோ லிருத்தல்; அச்சம் என்பது தன் கணவனன்றி மற்ற புருடரைக் கண்டவிடத் தஞ்சுதல்; பயிர்ப்பு என்பது கணவரல்லாதவர் கை மேலேபடின் உடம்பு அருவருத்தல். ஆகிய இவைகளிற் சிறிதும் குறையாது சாந்தகுண சீலர்களாய் இருப்பதும் தவிர,

“ மங்கையரைப் பால்யத்தில் வளமொடு பிதாவே காப்பான்
பொங்கிய யௌவனத்தில் பொருந்து பர்த்தாவே காப்பான்
தங்கிய மூப்பிலே தன் றனயனே காப்பான்
* * * * ”

என்றபடி பால்யத்தில் தாய் தந்தையர் காப்பிலும், விவாகமான பிறகு கணவனது காப்பிலும், விருத்தாப்பிய தசையில் புத்திரருடைய காப்பிலும் அடங்கியிருப்பது மேலான நிலைமை. எக்காலத்திலும் தனியேயிருப்பது சிரேஷ்டமாகாது. தவிர, முக்கியமாய்க் கொண்ட கணவனே குரு, தெய்வம், விரதம், மோக்ஷம், இகவாழ்வு, சுவர்க்கம் முதலிய சகலமும் தன்னுயிர்க்குத் துணையுமாமென்று அத்தியந்த பிரீதியுடனே பணிவிடைசெய்து வரவேண்டும். புருடனைவிட்டுப் பாரியை தனியே யிருக்க சுதந்திரம் கிடையாது. அவரது அனுக்கிரகம் பெற்றாலொழிய தனக்கு கடைத்தேறும் மார்க்கம் வேறு வழியிற் கிடையாது. கல்லென்றாலும் கணவன் புல்லென்றாலும் புருடனென்னும் பழமொழிக்கிணங்க உண்மையான பக்தி விசுவாசத்தோடு காலங்கழிப்பதில் மிகுந்து சுக போகம் கொடுப்பதில் வேசியைப்போலும், ஊழியஞ்செய்து வருவதில் வெள்ளாட்டி போலும், வீட்டுக்காரியங்கள் நடத்துவதில் துணைவன்போலும், ஆலோசனை கூறுவதில் மந்திரிபோலும், அறுசுவையோ டன்னமூட்டுவதில் தாயைப் போலும், பிரியத்தில் சிநேகன் போலும், இத்தகைய நற்குணங்களோடு கூடினவளாய் இருப்பதுந் தவிர அக்ங்காரம், பொய், களவு, வஞ்சகம், கோள், புறங்

கூறல், பொறாமை, கோபம் முதலிய துர்க்குணங்களைப் பற்றற நீக்கி தயை, பொறுமை, சாந்தம், அன்பு, தாக்ஷண்யம், இச்சையடக்கம், வணக்கம், உபகாரம் முதலிய திவ்ய குணங்களும் அமையப் பெற்றவளாய் வைகறையில் புருடனுக்கு முன் எழுந்து தந்தசுத்திசெய்து காலைக்கடன் முதலியன முடித்து நெற்றியில் திருமண்ணிட்டுக்கொண்டு சூரியனைத் தொழுது தன் கணவனது முகத்தில் விழித்து அவரது பாதங்களுக்கு புஷ்பங்களைச் சமர்ப்பித்து தொழுது வணங்கி அடிசில் முதலிய உணவுகள் ஆயத்தம் செய்து ஸ்நான பூஜாதிரவியம் போஜனம் முதலியன வமைக்கவேண்டும். மாமன் மாமிகளுக்கும் பாதங்களைக் கழுவி பூஜிக்கவேண்டியது. அதிதிகளையும் குடும்பத்தாரையும் உபசரித்து போஷித்து வரவேண்டியது கடமையாகும். யாவருக்கும் சாந்தமாய் நடந்துகொள்ள வேண்டியது. குளிர்ந்த முகத்தாளாய் சுத்திபத்தியாய் காலங்கழிப்பவளாய் இருந்தால் இம்மையில் புகழும் மறுமையில் சுவர்க்கமும் பெறுவள். கணவன் மனம் நோக நடப்பவள் இம்மையில் பழியும், மறுமையில் நரகமும் அடைவாள். ஆகையால் ஸ்திரீகளுக்கு இந்த பதிவிரதா தருமத்தைத் தவிர வேறு மார்க்கம் கடைத்தேறக் கிடையாதென்று மேலோர் கூறுவர். சுபம்.

---

## ஜீவோற்பத்தியும் அதன் சிகிச்சையும்.

(275-ம் பக்கத் தொடர்ச்சி)

ஓமயோபதி என்னும் ஜெர்மன்தேசத்து சிகிச்சையில் விஷசுரங்களுக்கு சுரம் வந்துவிட்டபின் (நேட்ரம் சல்ப்) என்னும் ஔடதத்தை யுபயோகிக்கின்றார்கள். லூவிஸ்கூனியின் விதிப்படி தொட்டிஸ்நானம் அதாவது (Hip bath) என்றும் சிலர் (இஸ்னுபல்லி) என்னும் ஔடதத்தையும் உபயோகிக்கின்றார்கள். சுதேசவைத்தியர்கள் இதற்குச் சில பச்சிலைகளைக்கொடுத்து குணம்செய்து வருகின்றார்கள். சாதாரணமாய் தும்பயிலையுடன் மிளகு வெள்ளுள்ளி சேர்த்தரைத்து காலையில் ஒரு கழர்ச்சிக்காயளவு உட்கொண்டால் சுரம் நீங்கிவிடுகின்றது. அன்றியும் சுரப்பட்டை, வேப்பம்பட்டை, விஷ்ணுகிராந்தி, நிலவேம்பு இவைகளின் கஷாயங்களாலும் நிவர்த்தியாகின்றது. சிலர் இவைகளைத் தனித்தனி உபயோகிக்கின்றார்கள். அநேகர் பலதினுசுகளும் சேர்த்து உபயோகிக்கின்றார்கள். இவைகளெல்லாம் சுரங்களை நிறுத்தக்கூடியவைகளாயிருந்தாலும் சுரக்கட்டியுள்ள புருஷர்களுக்குப் பயன்படாது. அநேகர் சுரக்கட்டியை நிவர்த்திக்க சில உப்புவகையராக்களும் எண்ணெய் வகையராக்களும் உபயோகித்துவருகின்றார்கள். இவைகளினாலும் சுரக்கட்டி நீங்குவதில்லையால் சுரக்கட்டியைக் குறைக்கும் ஔடதங்களில் முக்கியமாய் நாகதாளிபழம் 40-பழம் ஒன்றிரண்டாய் இடித்து 1-படி சலம்விட்டு ½-படியாகச் சுண்டக்காய்ச்சி 1-வீசை சர்க்கரை சேர்த்து சர்பத்தாகச் செய்து காலை மாலைகளில் வேளைக்கு ½-அவுன்சாக உட்கொள்ளவேண்டும். இனிப்பதிகமாயிருந்தால் சலம் சேர்த்து சாப்பிடலாம். கட்டிக்கு மேல்போடும் சிகிச்சைகளினால் சுரக்கட்டி கூடிய சீக்கிரம் நிவர்த்தியாகின்றது. மேல்போடும் மருந்தின் விபரம்:—பாதம்பிசினி, வேலம்

பிசினி, (சாரவந்த்) (உஷக்) இவைகளைச் சமமாய்க்கலந்து காடிசலம, விட்ட ரைத்து குழம்பாய்ச்செய்து ஒருபாத்திரத்தில் வைத்துக்கொண்டு வியாதியஸ்தர் களின் கட்டியினளவாக வஸ்திரத்தைக் கத்தரித்து மேற்படி மருந்தைத்தடவி கட்டியின்மேல் போடவேண்டும். அதன்மேல் சலம்படலாகாது. தானுகவே அந்த பத்தானது விழுகின்றவரையில் பொறுத்திருந்து விழுந்தபின் மறுபடியும் போட வேண்டும். இப்படி இரண்டு மூன்றுதரம் போடுவதற்குள் கட்டி பூராவும் கரைந்து விடுகின்றது. இப்பவும் சென்னையில் ஆறுமுகமுதலி வீதியில் ஒரு மாதிற்கு சுமார் 2-வருஷகாலமாய் வயிற்றில் சுரக்கட்டி இருந்திருந்தது. அதற்கு அம்மாதி ற்கு ஆஸ்பத்திரியில் ஒளடதம்வாங்கி உபயோகித்துவந்தார்கள். அதனுல் யாதொரு பயனும் காணுதபடியால் டாக்டர் எட்டி என்பவர்களிடம் சுமார் 6-மாத காலமாய் ஒளடதம் பெற்று உபயோகித்துவந்தார்கள். கடைசியில் அவர் சொன்னதாவது இந்தக் கட்டியானது இருக்கவேண்டிய அளவைவிட 6-பங்கு அதிகமாய் விட்ட படியால் நாங்கள் உபயோகிக்கும் ஒளடதங்களால் குணமடையாது. தாங்கள் அந்நியதேசம்போய் சிலகாலமிருந்தால் குணமாகுமென்று சொன்னதைக் கேட்ட வுடன் மனங்கலங்கி அம்மாதை இராயபுரம் மிஷன் ஆஸ்பத்திற்குச் சென்று காண்பித்தார்கள். அவர்களும் அப்படியே சொல்லிவிட்டார்கள். பிறகு என்னி டம்வந்தார்கள். அதுசமயம் அவர்களுக்கு ஆகாரம்செல்லுவது கிடையாது. ஏதா கிலும் உட்கொண்டால் உடனே வாந்தியாகிவிடும். அன்றியும் மேல் சுவாஸம் வாங்கும். இந்தஸ்திதியில் மேற்சொல்லிய பத்தைபோட்டேன். முதல்போட்ட பத்தானது 4-நாள் பரியந்தம் விழவில்லை. பிறகு தானுகவே நகர்ந்து விட்டவுடன் கட்டி $\frac{1}{4}$-பாகம் குறைந்திருக்கக் கண்டார்கள். மறுபடியும் இரண்டாம்தடவை போட்ட பத்தானது 3-நாள் இருந்தது. இப்படி 4-முறை உபயோகித்தவுடன் கட்டியிருந்த விடமே தெரியாதொழிந்தது. முதலில் ஒரு பூசனிக்கா யளவாக விருந்த வயிறுனது இருந்த இடம் தெரியாமல் போகச்செய்த மேல்சொன்ன பத்தின் உபயோகங்களை யாவற்றும் விபரமாய்ச் சொல்லில் இந்தச்சஞ்சிகை இடந்தராதென வஞ்சுகின்ருேம்.

---

## கற்கோட்டை—நாவல்

(279-ம் பக்கத் தொடர்ச்சி)

திடீரென்று கதவு திறக்கப்பட்ட சத்தத்தைக் கேட்டதே அறையில் இருந்த வாலிபன் திடுக்கிட்டெழுந்து திரும்பிப்பார்த்தான். தன்முன் நிற்கும் கன்னிகை யைக் கண்டதே அவன் முகத்தில் சொல்லொணு வியப்பும் சந்தோஷமும் பிரகாசித்தது. ஆனுல் அவன் முகத்தைக் கண்ட நமது கமலாம்பாளுக் குண் டான வியப்போ பின்னும் சொல்லத்தரமல்ல. ஆச்சரியமும், சந்தோஷமும், இரகசியம் வெளியாய் விட்டதென்ற உணர்ச்சியும், இவன் இராணியின் கோபத் திற்கும் தண்டனைக்கு முள்ளாய் விட்டிருக்கிறுனே என்ற துயரமும், ஆகிய இத்தனை குழப்பங்களும் ஏககாலத்தில் உண்டாகவே அவள் மனதை யடக்க முடியாதவளாய், "ஆ! கண்ணு கண்ணு" என்று கூறிக்கொண்டே நிற்க முடி யாமல் கதவின்மேல் சாய்ந்து விட்டாள்.

## 5-வது அத்தியாயம்

கதவின்மேல் சாய்ந்த கமலாம்பாள் மூர்ச்சையடையவில்லே. ஒருவரை யொருவர் இனி காணப்போகிறதில்லே யென்று எண்ணியிருந்த இருவரும் எதிர் பாராவண்ணம் இவ்வாறு சந்திக்கவே இருவரும் ஆச்சரியத்தால் திகைத்து இரண் டொருவிஞடி பேசமுடியாமல் அசைவற்றுப் பதுமைகள்போல நின்ருர்கள். இருவர் உள்ளத்திலும் உண்டான ஆனந்தமானது திப்பிரமையடையச்செய்தது.

அந்தப்பிரமை நீங்கி மனம் சற்று சாந்தமடைந்ததே கமலாம்பாள் மனதில் ஒருசந்தேக முதித்தது. அதாவது, "இவன் நமது கண்ணபிரானேயா யிருக்க இவன் என் சந்தோஷமாய் நம்மை யேற்றுக்கொள்ளவில்லே" என்று நினைத் தாள். அதற்குள், "ஹா, நாம் இவனே முதலிற் சந்தித்தபோதும் இருவரும் சிறு வர்களாயிருந்தோம். இப்போது நாம் புத்தியறிந்த கன்னிகையாயிருக்கிருேம். இவன் நல்ல யௌவன வாலிபனு யிருக்கிருன்" என்று நினேத்தாள். ஆகை யால் நாணத்தோடு ஒதுங்கிநின்று, "ஆம் ஆம். நீர்தான் முன்வந்த கண்ணபிரா ஞக இருக்கவேண்டும்" என்ருள்.

அவ்வாலிபன் அவள் வனப்பைக்கண்ட சந்தோஷத்தால் ஒருபக்கம் புன் னகையுடையவனுயினும் துயரமான முகத்தோடு "அது என்பெயரல்ல" என் ருன். இதைக்கேட்டதே கமலாம்பாள் மிக்க வியப்படைந்து முகவாட்டத்தோடு "உன்பெயரல்லவா!" என்ன அதிசயமாயிருக்கிறது. அந்தப்பெயர் உமது பெயரல்லவா. ஒருக்கால் இப்போது வேறே பெயர்வைத்துக் கொண்டிருக்கி றீரோ?" என்ருள்.

அவ்வாலிபன், "இல்லேயில்லே. என்பெயர் அம்பலவாணன். ஆயினும் எக்காரணத்தாலாவது உனக்கு என்மேல் ஒருவிதப் பிரியமுண்டாயின் அதை நீக்கிவிடாதே, நீக்கிவிடாதே. உன்மேல் எனக்கும் பிரியமுண்டாயிருக்கிறது. என் ஜன்மத்தில் இப்போது நான் அடைந்துள்ள சந்தோஷம் எப்போதும் அனுப வித்ததேயில்லே" என்ருன்.

கமலாம்பாள் மிக்க வியப்பும் கலவரமுமடைந்து அவனே யுற்றுநோக்கி "இதென்னமாயம். நமது கண்ணபிரான் இப்போது இவ்வளவு வயதுடைய வனுய் இப்படித்தான் இருப்பான். மாறியிருந்தாலும், வளர்ந்திருந்தாலும் இதே வுருவமாய்த்தான் இருப்பான்" என்று தனக்குள்ளாகவே சிந்தித்துக்கொண்டு "நீர் கண்ணபிரானல்லவா?" என்ருள்.

வாலிபன், "அல்ல. நான் அம்பலவாணனே. ஆயினும் எப்படியிருந்தாலும் உன்மட்டில் அப்படியே நினைத்துக்கொள்" என்ருன்.

இதைக்கேட்டதே கமலாம்பாளுக்கு பிரமை யுண்டாய்விட்டது. இன்ன விதமாய்ச் சிந்திப்பதென்று ஒன்றுமே தெரியவில்லே. மிரள மிரள விழித்தாள். அவனேயுற்று நோக்கினுள். "அப்படியாளுல் நான் உம்மை இதுவரையில் பார்த் ததேயில்லேயென்ரு கூறுகிறீர்? என்ருள்.

**வாலிபன்.**—"அப்படித்தான் நான் விடையளிக்க வேண்டுமென் றஞ்சுகிறேன்" என்ருன்.

அதைக்கேட்டதே கமலாம்பாள் "அப்படியானல் போதும். இனி நான் போகிறேன். தங்கள் வார்த்தைகள் உண்மையென்றே நான் நம்பவேண்டும். இவ்வாறு தற்செயலாய் நாம் சந்தித்ததை யிதோடு தயவுசெய்து மறந்துவிடும் யாரிடமும் கூறவேண்டாம்" என்றாள்.

**வாலிபன்.**—"ஏன் நீ போய்விடவேண்டும். நாம் சந்தித்தது தற்செயலாய் என்று கூருதே. தெய்வசங்கல்பத்தால் என்று கருது" என்ருன்.

**கமலாம்பாள்.**—மிக்க வியப்படைந்து "நீர் கூறுவதென்ன வீண்பேச்சா. அல்லது அவற்றில் ஏதேனும் உட்கருத்து அடங்கியிருக்கிறதோ?" என்ருள்.

**வாலிபன்.**—"நீ அதை யெவ்வாறு பொருள்படுத்திக் கொண்டாலும் சரி முதல் உண்டாகிய உணர்ச்சியைமட்டும் விடாமலே பற்றியிரு" என்ருன்.

கமலாம்பாளுக்கு மறுபடி பெருங்கலவர முண்டாய் விட்டது. மனதை யொருவாறு திடப்படுத்திக்கொண்டு, "நான் யார் உமக்குத் தெரியுமா. என் பெயர் கமலாம்பாள். இம்மாளிகையின் சொந்தக்காரராகிய ஸர்தார் செல்வ ராயருடைய புத்திரி. அவர் உமக்குத் தெரியும். அப்படிக்கின்றேல் நீர் இங்கு வந்திருக்க முடியாது. நீர் எப்படி வந்ததென்பதும் எனக்குத் தெரிகிறது. இப்போது எதையும் ஒளிக்காமல் கூறும். நாம் முன்பு சந்திக்கவில்லையா. இதே மாளிகையில் சரியாய் ஏழு வருடங்களுக்கு முன்பு" என்ருள்.

வாலிபன் சற்று சிந்தித்து, "இல்லையென்ருல் நீ போய்விடப் போகிருய். அப்படியிருந்தாலும் நான் வேறுவிதமாய்க் கூறமுடியாது. என் பெயர் அம்பல வாணனே. நாம் முன்பு சந்தித்ததில்லை. போய்விடாதே. என் உள்ளம் களங்கமற்றது. உன்னை இங்கு தெய்வசங்கல்பத்தால் கண்டபோது உண்டான மனே உணர்ச்சி என் உயிருள்ள வரையில் ஒருபோதும் நீங்காது" என்ருன்.

கமலாம்பாள் களங்கமற்ற உள்ளமுடையவள் ஆதலால் அங்கு இன்னும் சற்றுநேரம் தாமதிப்பது குற்றமென்று அவள் மனதில் தோன்றவில்லை. அதோடு அவளுக்குப் புலப்படாத ஏதோ ஒரு சக்தி அவளை அங்கேயே நிற்கும் படி செய்தது. அவ்வாலிபன் நான் கண்ணபிரானல்லவென்று எத்தனைதரம் கூறினும் அவளுக்கு அது உண்மைதானென்று புலப்படவேயில்லை. வானத்தில் பிரகாசிக்கும் சூரியன் தன்னைப்பார்த்து, "நீ நேற்று காலையில் பார்த்த சூரியன் நானல்ல" என்று கூறுவதுபோ லிருந்தது.

**வாலிபன்.**—"நான் எப்படி இங்கு வந்தேனென்பதைத் தெரிந்து கொண்டதாய்க் கூறினுய். உனக்கு அதைப்பற்றி என்ன தெரியும்" என்று வினவினுன்.

**கமலாம்பாள்.**—அதாவது இரவு பாதையில் குழப்பமும் சண்டையும் நேர்ந்தது. என் தந்தை வெளியிற் சென்று திரும்பி வரும்போது ஒரு ஆளைத் தன் கூட அழைத்து வந்தார். நான் மேல்மாடியிலிருந்து பார்த்துக் கொண்டிருந்தேன். ஆனல் அச்சங்கதி என் தந்தைக்குத் தெரியாது. ஆகையால் இப்போது நடக்கும் சங்கதியை நீர் அவரிடம் கூறலாகாது.

**வாலிபன்.**—உலகம்முழுதுமே எனக்களிக்கப்படுவதாயினும்கூறமாட்டேன். நான் என் இரவு அச்சண்டையில் இருக்க நேர்ந்ததென்று உனக்குத் தெரியுமா?

**கமலாம்பாள்.**—" நீர் இரவு நடந்த அக்கொடுஞ் சண்டையில் இருந்தீரல்லவா. ஆயினும் அப்படி யிராது. இவ்வளவு இளவயதில் இதற்குள்......" என்பதற்குள்,

**வாலிபன்.**—" இளவயதில்——உண்மையாய்க் கூறுகிறேன். வயது வந்த ஒரு சுத்தவீரன் யுத்தத்தின் உக்கிரத்தையும் கஷ்டத்தையும் எவ்விதமாய்ச் சகிப்பானே, அவ்விதமாகவே நானும் சகிக்க ஆயத்தமாயிருக்கிறேன் " என்றான்.

இவ்வார்த்தைகளைக் கேட்டதே கமலாம்பாள் திடுக்கிட்டு விட்டாள். தான் யூகிக்க முடியாத ஏதோ ஒரு மந்திரக்கட்டுக்குள் தான் சிக்கிக்கொண்டிருப்பது போல் அவள் புத்தியிற்பட்டது. ஆகையால் அவள் தன்னை மறந்து, " ஆகா ! கண்ணபிரான் நீராகவே யிருந்தால் அவர் இப்படித்தான் இதே மாதிரித்தான் தைரியமாய்ப் பேசுவார் " என்றாள்.

**வாலிபன்.**—" கண்ணபிரான் என்பவனுடைய நினைப்பு உன் மனதில் வேரூன்றி விட்டிருப்பதுபோல் தெரிகிறது. அந்தக் கண்ணபிரான் என்பவனைப் பற்றி ஏதாவது கூறு பார்ப்போம் " என்றான்.

**கமலாம்பாள்.**—என்ன காரணமோ தெரியவில்லை. ஏதுவோ வொன்று என் மனதிலிருப்பதை யொளிக்காமல் உன்னிடம் கூறும்படி தூண்டுகிறது. அந்தத் தூண்டுதலைத் தடுக்க என்னால் முடியவில்லை.

**வாலிபன்.**—அத் தூண்டுதலுக்கு இணங்கிவிடு இணங்கிவிடு. கூறு கூறு. அந்தக் கண்ணபிரானை நீ அதிகமாய் நேசித்திருக்கிறாய் போலும்.

கமலாம்பாள் மனம் மிக்க கலக்கத்திலேயே யிருந்தது. இவன் கண்ணபிரானா அல்லவா, எது பொய் எது உண்மையென்று இன்னம் அவள் மனதிற்குப் புலப்படவேயில்லை. ஆயினும் தன் எதிரில் இருப்பவன் கண்ணபிரானென்று நம்பிக்கையாய்த் தெரியாவிட்டாலும் அவன் உருவத்திற்குள் இருப்பது கண்ணபிரானுடைய உயிராகவாவதிருக்குமென்று அவள் மனதில் ஒருவித உணர்ச்சி யுண்டாயிற்று. அவனிடம் தன் மனதிலுள்ள இரகசியம் யாவற்றையும் கூறிவிடலாமென்ற ஒரு ஆவல் உதித்தது.

ஆதலால் அவள் ஒருவித உற்சாகத்தோடு " நான் கூறும் கண்ணபிரான், நாங்களிருவரும் சிறுபிள்ளைகளாயிருக்கையில், என்னிடம் அனேகம சங்கதிகளைக்கூறினான். தான் யுத்தத்திற்குப் போவதாய்க்கூடக்கூறினான். ஐயோ யுத்தத்தில் கொல்லப்பட்டால்—ஆனால் அவன்கொடுத்த அடையாளத்தை நான் பத்திரமாய் வைத்துக்கொண்டிருக்கிறேன் " என்று கூறியதும் நாணமடைந்து தலைகுனிந்தவண்ணம் நின்றாள்.

வாலிபன் அதைக்கேட்டதே " ஆ ! ஒரு அடையாளமா. அதைத் தயவு செய்து எனக்குக் காட்டலாகாதா ? நான் கேட்கிறேனென்று கோபிக்கவேண்டாம். நீ கண்ணபிரான்மேல் அத்தகைய உண்மையும் உறுதியுமான காதல் கொண்டிருப்பதாயின், என்னையொரு சகோதரனாகவேனும் பாவித்து என்மேல் விசுவாசம்வைத்து என்னிடம் தாராளமாய்ப்பேசலாமே. ஒருஅடையாளமென்று கூறினாயல்லவா ? " என்றான்.

கமலாம்பாள் " ஆம் " என்று கூறிக்கொண்டே சற்று தடுமாற்றத்தோடு தன்கழுத்தில் தொங்கவிட்டிருந்த ஒருசிறுபையையெடுத்து அதன்மேலுள்ள தையலைப்பிரித்தாள். அதற்கிடையில் வாலிபனுடைய சிகையை யுற்றுநோக்கி உள்ளத்தில் சந்தோஷமும் நம்பிக்கையுமுடையவளானாள். ஆனால் அச்சிறுபையிலிருந்த தலைமயிர்முடிச்சைக் கையிலெடுத்து அதையுற்றுநோக்கியதும் தன் எதிரி

லிருக்கும் வாலிபனுடைய தலைமயிரின் நிறத்தையும்நோக்கி நிறத்தில் வித்தியாசமிருப்பதைக்கண்டு முகம் சோர்ந்து துயரத்தோடு தலையசைத்து,

"இல்லை யில்லை. நீ கூறியது கடைசியில் உண்மையே. நீ கண்ணபிரானல்ல" என்றாள்.

**வாலிபன்:**—"அப்படியே யிருக்கட்டும். ஆயின் என் விஷயத்தில் உனக்குச் சற்றேனும் பிரியமுண்டாகாதா. நான் பழைய மதக்காரர் கூட்டத்தில் சிக்கியிருந்தாலும் உண்மையில் நான் அதைச் சேர்ந்தவனேயல்ல. இதோ பார்! நான் சீர்திருத்தப்பட்ட புதுக்கொள்கைகளின் படிக்கே கடவுளைப் பிரார்த்தனை செய்கிறேன். ஆகையால் மதவிஷயத்தில் நமக்குள் எவ்விதத்தடையுமில்லை."

**கமலாம்பாள்:**—தடையா! ஓ! நான் இவ்வாறு உன் மொழிகளுக்குச் செவிகொடுப்பது கண்ணபிரானுக்குத் துரோகம் நினைத்ததாய்முடியும். நீ என்னதான் கூறினாலும் என்மனதில் என்முன் நின்றுபேசுவது கண்ணபிரான் உருவமேயென்றே என்மன நினைவாயிருந்ததால் நான் இதுகாறும் நின்று சம்பாஷித்தேன்.

**வாலிபன்:**—"என்னை அம்பலவாணன் என்றே நினைத்து என்மேல் அன்பு வைக்கும்படியாய் வேண்டிக்கொள்கிறேன்" என்றான்.

**கமலாம்பாள்:**—"முடியாது முடியாது. நீ கண்ணபிரானாகவிருந்தால் நான் கண்ணபிரானல்லவென்று ஒருபோதும் கூறியிருக்கமாட்டாய். கடைசியில் நீ கண்ணபிரானல்லவென்றே நான் தீர்மானித்துக் கொள்ளவேண்டும். ஓ! எனக்குத் தலைசுற்றுகிறது. கண் இருளடைகிறது" என்று நிற்கமுடியாமல் தள்ளாடி வாயிற்படியைத்தாவிப் பிடித்தாள்.

அதேசமயம் திடீரென்று கதவு திறக்கப்பட்டதும் அவள் தந்தை யுள்ளே வந்தார். அவர் ஏதோ கூறியதுபோல் மட்டும் தெரிந்ததேயன்றி இன்னது கூறினாரென்று விளங்கவில்லை. ஏனெனில் அதற்குள் அவள் மூர்ச்சையடைந்துவிட்டாள்.

கமலாம்பாள் மூர்ச்சைதெளிந்து கண்களைத்திறந்து பார்த்தபோது சூரியன் நன்றாய்ப் பிரகாசித்துக் கொண்டிருந்தது. தான் படுக்கையில் சயனித்துக் கொண்டிருக்கிறாள். தன் அத்தைபக்கத்தில் உட்கார்ந்திருக்கிறாள். கமலாம்பாள் கண்களைத்திறந்ததே தங்கம்மாள் குனிந்து அவளுக்கு முத்தமளித்து "குழந்தாய்! இப்போது உனக்குச் சவுக்கியமாயிருக்கிறதா அல்லது இன்னும் சற்று நேரம் நித்திரைசெய்கிறாயா?" என்றாள்.

கமலாம்பாள் மிக்கதுயரத்தோடு "அத்தையே, அந்த அறையில் இருக்கிறது யார்? அவன்பெயர் அம்பலவாணன் என்பது உண்மைதானா? தயவுசெய்து கூறு" என்று கேட்டாள்.

மூதாட்டி தலையசைத்து "நீ யின்னும் சற்று நன்றாய் இளைப்பாறு. உன் புத்தி சபலித்திருக்கிறது" என்றாள்.

**கன்னிகை:**—"அத்தை! எனக்கு ஆயாசமொன்றுமில்லை. தந்தை கோபித்துக் கொண்டாரோ?" என்றாள்.

தங்கம்மாள் மிக்க வியப்படைந்தவள்போல், "என்ன! கோபமா? உன்மேல் கோபிக்கவேண்டிய காரண மொன்றுமில்லையே. உன்னையறியாது நித்திரையில் நடந்துசென்றாய் (தூக்கத்திலேயே நடந்துசெல்வது ஒருவிதவியாதி) அதற்கு நீ யென்ன செய்வாய் பாபம். நன்றாய்த் தூங்கினால் அதெல்லாம் அடியோடு மறந்துபோகுமென்று எண்ணினேம்" என்றாள்.

இம்மொழிகளைக் கேட்டதே கமலாம்பாளுக்குண்டான ஆச்சரியம் கொஞ்ச நஞ்சமல்ல. "நித்திரையில் நடப்பதா!" என்றாள்.

**தங்கம்மாள்:**—"ஆம். அதோடு நீ யேதோ ஆச்சரியமான கனவுகண்டிருக்கிறாய். அது உன் மனதைவிட்டு யின்னும் நீங்கவில்லை" என்றாள்.

**கமலாம்பாள்:**—என்ன? கனவா? நடந்ததெல்லாம் கனவென்றாகூறுகிறாய். இரவுநடந்த சங்கதிதானென்ன கூறு.

**தங்க:**—"இரவு சுமார் 12-மணிக்கு உன்தந்தை நாயை வெளியிலேயே விடாமல் கீழ்கட்டில் உள்ளேயேவிட்டு கதவை மூடிக்கொண்டோமேயென்று நினைத்து அதைத்தேடிச் சென்றார். அப்போது நீ கீழேயிருக்கும் நெருக்கமான வழியில் நின்றுகொண்டிருந்தாய். உன்கண்கள் அகன்றிருந்தன. நீ யவரைக்கண்டதே கோவெனறலறி விழுந்துவிட்டாய். பிறகு இங்கே எடுத்து வந்துவிட்டோம்" என்றாள்.

கமலாம்பாள் சற்றுநேரம் சிந்தித்துப்பார்த்தாள். என்ன சிந்தித்தாலும் இரவுநடந்தது கனவென்று அவள் மனதில் எள்ளளவும் படவில்லை. கடைசியில் தங்கம்மாளைநோக்கி, நான் நின்றிருந்தவிடத்தில் ஒரு கள்ளஅறை யிருக்கிறதா வென்றாள். தங்கம்மாள் இல்லவேயில்லை யென்றாள். அதன்மேல் கமலாம்பாள் திடீரென்று என்னமோ நினைத்துக்கொண்டு தட்டென்று படுக்கையை விட்டெழுந்து தன் மேலங்கியையெடுத்து அதன் ஜேபியில் இரவு தான் வைத்த சிறுபையை யெடுத்துப்பார்த்தாள். இரவுதான் அதன் வாய்ப்புறத்திலிருந்த தையலைப் பிறித்துவிட்டது நினைவிலிருந்தபடியால் அதைப்பார்த்து உண்மை யறிந்துகொள்ளலாமென்று சிந்தித்தாள். அந்தப்பையின் தையலோ பிறிக்கப்படாமல் முன் இருந்ததுபோலவே தைக்கப்பட்டிருந்தது.

அந்தப்பை தைத்திருப்பதைக்கண்டதே அவள் திகைத்துவிட்டாள். ஓகோ கடைசியில் யாவும் ஒரு பெரிய கனவாகவேயன்றோ விருக்கிறது என்று அவள் புத்தியிற்பட்டது. அந்த எண்ணத்தால் அவளுக்கு இடிவிழுந்தமாதிரியா யிருந்தது. கையிலிருந்த பை நழுவிக் கீழே விழுந்துவிட்டது. அவள் மூர்ச்சையாய் விழுந்துவிட்டாள்.

ஆனால் இச்சமயம் அவள் நெடுநேரம் அந்த நிலைமையிலில்லை. சீக்கிரத்தில் ஸ்மரணை வந்துவிட்டது. அவள் தங்கம்மாளைநோக்கி, "நான் ஒரு சங்கதி யுன்னைக்கேட்க விரும்புகிறேன். அதாவது முந்தாநாள் இரவு வீதியில் ஏதோ குழப்பம் நடந்தபோது நீங்கள் இங்குவந்து கதவைத்தட்டினீர்கள். நான், பயப்படவில்லை, படுத்துக்கொண்டேன், என்று கூறிவிட்டேனல்லவா. உண்மையில் நான் தந்தையும் வேலைக்காரரும் வெளியில் சென்றிருந்ததையும், அவர்கள் திரும்பிவரும்போது ஒரு ஆளை யுள்ளே யழைத்துவந்ததையும் பார்த்தேன். மறுநாட் காலை எனக்கு அதைப்பற்றி யொன்றுமே கூறாமல் நீங்கள் மர்மம் சாதித்தது என்மனதிற்கு வருத்தத்தை யுண்டாக்கியது" என்றதே,

**தங்கம்மாள்:**—"குழந்தாய, நாங்கள் அப்படிச்செய்தது உனக்கு மனத்துயரை யுண்டாக்கவேண்டு மென்பதற்கல்ல. அதற்குமாறாக மனவருத்தம் நேரிடாமற் செய்வதற்கே அப்படிச்செய்தோம். அன்று வீதியில் குழப்பம் அடங்கியதே யுன்தந்தை ஆட்களோடு வெளியிற்சென்று பார்த்தபோது ஒருவன் இறந்தவன்போல் கீழேகிடந்தான், உண்மையில் அவன் மூர்ச்சையடைந்திருந்தான். அவன் புதுமதத்தைச் சேர்ந்தவன். அப்படியிருந்தும் உன்தந்தை சீவகாருண்யத்தைக் கருதி அவனை வீட்டிற்குள் கொண்டு வந்தார். இரண்டு மூன்று நாழிகைகளுக்குள் அவன் களைதீர்ந்து உடனே இதைவிட்டுப் போய்விட்டான்" என்றாள்.

# " ஆனந்தபோதினி " பஞ்சாங்கம்

நள௵ தை௴ சாலிவாகன 1838, கலியுகாதி 5017,

பசலி 1325-26, கோல்லம் 1091-92,

இங்கிலீஷ் 1917-ம்௵ ஜனவரி—பிப்ரவரி௴

| ஜனவரி௴ | தை௴ | வாரம் | திதி. | நக்ஷத்திரம். | யோகம். | விசேஷங்கள். |
|---|---|---|---|---|---|---|
| 13 | 1 | ச | பஞ்-38-23 | பூர-23-16 | சித்த 60 | போங்கல் பண்டிகை |
| 14 | 2 | ஞா | சஷ்-42-0 | உத்-27-31 | அமிர் 60 | கோபூஜை |
| 15 | 3 | தி | சப்-43-41 | அஸ்-30-35 | சித்த 60 | கரிநாள் |
| 16 | 4 | செ | அஷ்-43-19 | சித்-32-24 | சித்த 60 | வஸ்திராபரணம் கொள்ள |
| 17 | 5 | புத | நவ-42-14 | சவா-32-48 | சித்த 60 | மருந்துண்ண |
| 18 | 6 | வி | தச-40-49 | விசா-32-12 | சித்த 60 | நவவஸ்திரதாரணம் |
| 19 | 7 | வெ | ஏகா-38-29 | அனு-30-27 | சித் 30 மர | விவாகம் |
| 20 | 8 | ச | துவா-34-21 | கேட்-28-4 | சித்த 60 | சீமந்தம் |
| 21 | 9 | ஞா | திர-28-15 | மூல-24-56 | அமி 25 சி | ருதுசாந்தி செய்ய, பூமுடிக்க |
| 22 | 10 | தி | சது-23-7 | பூரா-21-13 | சித் 21 மர | முத்து பவழம் வாங்க |
| 23 | 11 | செ | ● அமா 18-14 | உத்-17-15 | சித் 17 மர | **தை அமாவாசை விரதம்** |
| 24 | 12 | புத | பிர-12-23 | திரு-13-11 | சித் 13 ம | புது பாத்திரம் புழங்க |
| 25 | 13 | வி | துதி-6-36 | அவி-9-9 | சித் 9 மா | பொன்னுருக்க |
| 26 | 14 | வெ | திரி-1-6<br>சது-54-51 | சத-5-24 | சித்த 60 | தனியநாள் |
| 27 | 15 | ச | பஞ்-51-44 | பூரட்-2-10 | மா 2 சித் | 11-க்குள் மழை |
| 28 | 16 | ஞா | சஷ்-48-18 | ரேவ-49-2 | அமி 49 சி | **சஷ்டி விரதம்** |
| 29 | 17 | தி | சப்-45-49 | அசு-57-7 | சித்த 60 | கரிநாள் |
| 30 | 18 | செ | அஷ்-44-33 | பர-57-35 | சித்த 60 | மூலிகை உபயோகிக்க |
| 31 | 19 | புத | நவ-44-28 | *கார்-59-13 | அமிர் 60 | **கிருத்திகைவிரதம்** |
| 1 | 20 | வி | தச-45-40 | ரோக-60-0 | மரண 60 | ருதுசாந்தி செய்ய |
| 2 | 21 | வெ | ஏகா-48-53 | ரோக-2-17 | மர 2 சித் | வித்தியாப்பியாசம் |
| 3 | 22 | ச | துவா-51-51 | மிரு-6-26 | சித்த 60 | |
| பிப்ரவரி௴ 4 | 23 | ஞா | திர-56-19 | திரு-11-36 | சித்த 60 | கமுகு நட |
| 5 | 24 | தி | சது-60-0 | புன-17-30 | அமி 17 சி | பூ முடிக்க |
| 6 | 25 | செ | சது-1-28 | பூச-23-51 | சித்த 60 | **தைப்பூசம்** |
| 7 | 26 | புத | ○ பௌர-6 44 | ஆயி-30-12 | சித்த 60 | ஜபம் பூர்த்திசெய்ய |
| 8 | 27 | வி | பிர-11-56 | மக-36-18 | அமி 36 சி | விவாகம் |
| 9 | 28 | வெ | துதி-16-18 | பூர-41-49 | சித்த 60 | சித்திரமெழுத |
| 10 | 29 | ச | திரி-20-47 | உத்-47-42 | மரண 60 | பூமுடித்தல் |
| 11 | 30 | ஞா | சது-24-49 | அஸ்-51-47 | அ 52 சித் | புது பசுக்களைக்கட்ட |

PRINTED BY P. R. RAMA IYAR AND CO., MADRAS